# ஆண்டறிக்கை - 2019

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மிகவும் சிறந்த எதிர்காலத்திற்காக அரச துறைக்கு வலுவூட்டுதல் | 5 |
| | நோக்கு | 6 |
| | பணி | 6 |
| | உபாயமுறை இலக்குகள் | 6 |
| | முக்கிய பணிகள் | 6 |
| | எமது பெறுமானங்கள் | 6 |
| | உபாயமுறை இலக்குகள் | 6 |
| | அமைச்சின் செயலாளரின் ஆசிச் செய்தி | 7 |
| | பணிப்பாளர் நாயகத்தின் ஆசிச் செய்தி | 8 |
| 2. | நிதித் துறையின் முக்கிய நிகழ்வுகள் | 9-12 |
| 3. | ஆளுநர் சபையின் அங்கத்தவர்கள் | 13 |
| 4. | சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் கல்விசார் ஊழியர் குழாம் | 14 |
| | 4.1 உள்ளக கல்விசார் ஊழியர்களின் விபரம் | 14 |
| | 4.2 சேவை வசதிவழங்குநர்களின் விபரங்கள் | 15 |
| 5. | பணிகள் மற்றும் நிருவாகக் கட்டமைப்பு | 15 |
| | 5.1 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிக் கட்டமைப்பு | 16 |
| | 5.2 இ.அ.நி.நிறுவகத்தின் நிருவாகக் கட்டமைப்பு | 17 |
| 06. | பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு | 18 |
| | கற்கைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் - 2019 | |
| | 6.1 சேவை ஆரம்பப் பயிற்சிப் பாடநெறிகள் | 18 |
| | 6.2 நாடளாவிய சேவைகளுக்கான கட்டாய கற்கைகள் மற்றும் அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சிகள் | 19 |
| | 6.3 டிப்ளோமா நிகழ்ச்சிகள் | 20 |
| | 6.4 குறுகிய கால கற்கைகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் | 20 |
| | 6.5 தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் | 20 |
| | 6.6 முகாமைத்துவ ஆலோசனைகள் | 21 |
| 7. | பட்டப் பின் கற்கைகள் பாடசாலை | 22 |
| 8. | 2019 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகள் | 23-24 |
| 9. | தகவல் தொழில்நுட்ப நிலையம் | 25-28 |
| 10. | மொழிக் கல்வி நிலையம் | 29 |
| 11. | பொது நிர்வாகம் | 30 |
| | 11.1. பணியாட்தொகுதி முகாமை | 30 |
| | 11.2. மொழிக் கல்வி நிலையம் | 30 |
| | 11.3 சேவை வழங்கல் முகாமை | 30 |
| 12. | 2019 ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் முக்கிய நிகழ்வுகள் | 33 |
| | I. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவத்தினால் சனாதிபதிச் சுற்றாடல் விருது - 2019 ஆம் ஆண்டில் வெள்ளி விருதினை வெற்றியீட்டி கொணடது | 33 |
| | II. இலங்கை நிர்வாக சேவைக்கு புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களினால் எழுதப்பட்ட புத்தகங்களை வெளியிடும் நிகழ்வு பாராட்டுக்கு உட்படுத்தல் | 33 |
| | III. பணியாட்தொகுதியினரின் இறுதி பகுப்பாய்வு ரீதியான கலந்துரையாடலுடன் ஓய்வுச் சந்திப்பு (Retreat) 2019 | 33 |
| | IV. கடந்து வந்த நமது பயணம் | 34 |
| | V. இலங்கை பொலீஸின் பிரதிப் பொலீஸ் மா அதிபர்களுக்கான முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி | 34 |
| | VI. இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி | 35 |
| | VII. பிரயோக நடைமுறையினுள் தலைமைத்துவம் - என்ற தலைப்பில் பகிரங்க சொற்பொழிவு | 35 |
| | VIII. இலங்கை நிர்வாக சேவைக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான சமூக ஒருங்கிணைப்பு தொடர்பில் அமைந்த பாடநெறிகள் | 35 |
| | IX. அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் பட்டம் வழங்கும் விழா 2018 | 36 |
| | X. அறிவு, எல்லையைக் கடந்து... Knowledge Beyond Boundaries | 36 |
| | XI. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் முதற் தடவையாக உற்பத்தித்திறன் விருதை வெற்றியீட்டிக் கொண்டது | 36 |
| | XII. இந் நாட்டில் முதற் தடவையாக அரச துறையில் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக சட்டதிட்டம் தொடர்பாக புதியதொரு டிப்ளோமா பாடநெறியை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டது | 37 |
| | XIII. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் மற்றும் கனடாவின் செனகோ பிரயோகக் கலை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் ஒத்துழைப்பு | 37 |
| | XIV. பாகிஸ்தானில் பயிற்சிநிகழ்ச்சி | 38 |
| | XV. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணியாட்தொகுதியினருக்காக ஊவா குடாஓய கொமாண்டோ ரெஜிமேந்து பயிற்சிப் பாடசாலையில் நடைபெற்ற வெளிப் பயிற்சி | 38 |
| 13. | கணக்காய்வுக் குழுவின் அறிக்கை | 39-44 |

## 01. மிகவும் சிறந்த எதிர்காலத்திற்காக அரச துறைக்கு வலுவூட்டுதல்

அரசாங்க நிர்வாகத்திற்குப் பொறுப்பான அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனமான இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் (இ.அ.நி.நி) 1982 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் 1982 ஆம் ஆண்டு மே மாதம் தாபிக்கப்பட்டது. அது அரச துறையில் நிறைவேற்றுத் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களின தொழில்சார் அபிவிருத்தி மற்றும் தேர்ச்சி மேம்பாடு என்பன தொடர்பான பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட முன்னணி தேசிய நிறுவனமாகும்.

பொது நலனுக்கான முக்கியமான பெறுமானங்களின் அடிப்படையில் நோக்குகையில் இலங்கை அபிவிருத்தி நிர்வாகத்தின் முக்கிய பணி அரச துறையிலுள்ள உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சி வழங்குதல், அரச துறை நிறுவனங்களுக்கு முகாமைத்துவ ஆலோசனைகள் வழங்குதல், அரச உத்தியோகத்தர்களை ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஊக்கப்படுத்துதல் என்பனவாகும்.

மேலும், இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, பட்டப்பின் பட்டங்களை வழங்கும் உரிமையையும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. அதனடிப்படையில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பட்டப்பின் கற்கைகள் பாடசாலையின் ஊடாக அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் பட்டம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் டிப்ளோமா என்பன வழங்கப்படுகின்றன. இது அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் ஏனைய தரப்பினரும் ஒரே விதத்தில் தங்களது முகாமையாளர்களிடம் பெறுமதி சேர்த்த பங்களிப்பை வேண்டி நிற்கின்ற ஒரு நிலைமையில் தற்போது துரிதமாக மாற்றமடையும் சவால்கள் நிரம்பிய அரச முகாமைத்துவச் சூழலின் தேவைகளைப் பூர்த்தி செய்வதைப் பிரதான குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

அரசாங்க நிர்வாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் முழுமையான வழிகாட்டலின் கீழ் உள்ள நிறுவனங்களின் கொள்கைத் தீர்மானங்களுக்கான பொறுப்பை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் நிர்வாக சபை கொண்டுள்ளது.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம், பயிற்சி மற்றும் ஆய்வுக்கு ஒத்துழைப்பு வழங்கும் லண்டன் சிவில் சேவைக் கல்லூரி, சிங்கப்பூர் சிவில் சேவைக் கல்லூரி, சீனாவின் பீஜிங் வெளிநாட்டுக் கற்கைகள் பல்கலைக்கழம், இந்தியாவின் நிர்வாகம் தொடர்பாக லால் பஹதூர் சாஸ்திரீ தேசிய நிருவாக அகடமி, அவுஸ்திரேலியாவின் மொனாஷ் பல்கலைக்கழம், மாலைதீவு சிவில் சேவைப் பயிற்சி நிறுவனம், சீனாவின் ஹவாசோங் விஞ்ஞான, தொழில்பட்ப் பல்கலைக்கழம் போன்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடனும் பயிற்சி நிறுவனங்கள் பலவற்றுடனும் வலையமைப்பாகச் செயற்படுகின்றது. இரு தரப்பு பயிற்சி மற்றும் ஆய்வு ஒத்துழைப்புக்களைப் பேணி வருவதற்காக, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் 2018 ஆம் ஆண்டில் பின்வரும் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்து கொண்டது.

- பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் அரச கொள்கைகள் தொடர்பான தேசிய பாடசாலை
- இந்தியாவின் ஐதராபாத் அரச முயற்சியாண்மை நிறுவனம்

கடந்த 36 ஆண்டு காலப் பகுதியில் அறிவு மேம்பாடு, திறன் விருத்தி, ஒழுங்கமைப்பு அபிவிருத்தி மற்றும் ஆய்வுகளை மேற்கொள்ளுதல் ஆகிய துறைகள் உள்ளிட்டதாக பரந்த விடயப் பரப்பொன்றில் சேவை வழங்கலில் ஈடுபட்டு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் ஒரு சக்திவாய்ந்த முன்னணிப் பயிற்சி நிறுவனமாக வளர்ச்சி கண்டுள்ளது.

## தொலைநோக்கு

**"ஆசியாவில் அரச துறைக் கற்கை மற்றும் அபிவிருத்திச் செயற்பாட்டில் சிறப்புத் தேர்ச்சி நிலையமாக மிளிர்தல்"**

## பணிக்கூற்று

**கல்வி மற்றும் அபிவிருத்தி, ஆலோசனைச் சேவைகள் மற்றும் ஆய்வுகளின் ஊடாக படைப்பாற்றல் மிக்க, எதிர்கால நோக்கம் கொண்ட, பிரசைகளை மையமாகக் கொண்ட அரச சேவையினைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கான வசதி ஏற்பாடுகளைச் செய்தல்.**

## உபாயமுறை இலக்குகள்

- மிகவும் செயலூக்கமுள்ளதும் பயனுறுதிவாய்ந்ததுமான அரச சேவையினை உருவாக்குவதற்கான தேசிய மட்டத்திலான அபிவிருத்தி இலக்குகளுக்குப் பங்களிப்புச் செய்தல்.
- தேசிய மட்டத்திலான கொள்கை அபிவிருத்திக்கான பங்களிப்பு வழங்குதல் முக்கிய வகிபாகத்தை வகித்தல்.
- தனது கற்பித்தல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளுக்கு அதிக கேள்வியை ஏற்படுத்தக் கூடிய வகையில் தனது பங்காளர்களின் மனதில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் தொடர்பில் சாதகமான மனப்பாங்கைக் கட்டியெழுப்புதல்
- தெற்காசியாவிலும், தென்கிழக்கு ஆசியாவிலும் பொது நிர்வாகம் மற்றும் அரச முகாமைத்துவ விருத்தி தொடர்பான முகாமைத்துவத்திற்கு ஒத்துழைப்புக்கான மத்திய நிலையமாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தை முன்னேற்றுதல்

## முக்கிய பணிகள்

- கற்பித்தல் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளின் ஊடாக அரச துறையின் முகாமைத்துவ ஊழியர் குழாத்தினரின் திறன் விருத்தி
- பட்டப்பின் பாடநெறிகளின் ஊடாக அரச துறையிலுள்ள உத்தியோகத்தர்களின் அறிவை விருத்தி செய்தல்
- அரச கொள்கைகள் மற்றும் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய ஆய்வு நோக்கச் செயற்பாடுகளுக்கான கருவூலமொன்றை உருவாக்குதல்.
- அரசதுறை நிறுவனங்களினதும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினதும் உற்பத்தித்திறனையும் வினைத்திறனையும் விருத்தி செய்வதற்காக அமைப்பு ரீதியான அபிவிருத்திச் சேவைகள வழங்குதல்
- அரச துறையினருக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகள் மற்றும் மொழிப் பரீட்சைகளை நடாத்துதல்.

## எமது பெறுமானங்கள்

சிறப்புத் தேர்ச்சி, அர்ப்பணிப்பு, பல்வகைமை, பொறுப்புக்கூறல், நிலைபேறான தன்மை

## உபாயமுறை இலக்குகள்

"மிகவும் சிறந்த எதிர்கால இலங்கைக்கான அரச சேவையை வலுவூட்டுதல்"

## பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் ஆளுநர் சபைத் தலைவரின் ஆசிச் செய்தி

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் எனது ஆசிச் செய்தியை வழங்கக்கிடைத்ததையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இயலளவுவிருத்தி மற்றும் அட்டவணையிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக ஏனைய நிகழ்ச்சிகள் 150 க்கு மேலதிகமாக இவ்வமைச்சினால் ஒப்படைக்கப்பட்டுள்ள சேவைத் துவக்கப் பயிற்சித் திட்டங்கள் 11 இனையும் இவ்வருடத்தினுள் நடாத்த முடிந்தது. அவ்வனைத்து திட்டங்களையும் மிக கச்சிதமாகவும் வெற்றிகரமாகவும் நடாத்துவதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்துக்கு இவ்வருடம் மிகவும் சவாலாக அமைந்த வருடமாக நான் அவதானிக்கின்றேன். நிறுவனத்துக்கு உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளின் ஓர் அங்கமான அரச துறையின் ஏனைய நிறுவனங்களுக்கு முகாமைத்துவ ஆலோசனைச் சேவைகளை வழங்கி குறித்த நிறுவனங்களின் ஊடாக மக்களுக்கு வழங்கப்படும் சேவையின் தரத்தினை மேம்படுத்துவதிலும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் முக்கிய பங்களிப்பைச் செலுத்தியுள்ளது.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் பிரதானமாக செயலாற்றுவது அரச துறையின் முகாமைத்துவ மட்டத்தில் உள்ள உத்தியோகத்தர்களின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதாக இருந்தாலும் இவ்வமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க 111 கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு கேரளா அரசின் முகாமைத்துவ நிறுவனத்தில் வெளிநாட்டு அனுபவங்களை வழங்குவதற்கு வாய்ப்பளித்துள்ளது. அங்கே இயலளவு விருத்திக்கான நிகழ்ச்சிகள் அந்நிறுவனத்தினால் நடாத்தப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்க விடயமாக அமைந்துள்ளது. எமது நாட்டுக்கு சமனான அந்தஸ்த்தில் சமூகப் பொருளாதார வெற்றிகளை அடைந்துள்ள வெளிநாட்டுச் சூழலில் கிராம மட்டத்தில் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபடும் போது கையாளப்பட வேண்டிய சிறந்த பொறிமுறைகள் பற்றி கற்றுக்கொள்வதற்கும் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் அதனூடாக அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றது. நீண்ட காலமாக அரச துறையில் காணப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து, அரச உத்தியோகத்தர்களின் நிர்வாகத்துக்கு அவசியப்படும் சட்ட அறிவை வழங்குவதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அரச துறையின் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான நிர்வாகச் சட்டம் என்ற பெயரில் டிப்ளோமா பாடநெறியொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் பாரிய அர்ப்பணிப்புடன் நிறைவேற்றும் சேவைகளுக்குப் பொருத்தமான வகையில் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2019 ஆம் ஆண்டுக்கான சனாதிபதி சுற்றுச்சூழல் விருது (வெள்ளி விருது) உம், உற்பத்தித்திறன் விருதில் (மூன்றாம் இடத்தை யும் வெற்றியீட்டக் கிடைத்தமையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் அவ்வாறான தேசிய மட்டத்தில் அங்கீகாரத்தைப் பெற்று முன்னேறிச் செல்வதற்கு உறுதுணையாக இருந்த அதன் பணியாட்தொகுதியினருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிறுவகத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு வழங்கப்படும் பெறுமதியான வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு கௌரவ அமைச்சர் மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவாகத்தின் நிர்வாக சபையின் உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்கு இதனை சந்தர்ப்பமாக அமைத்துக் கொள்கின்றேன். இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணியாட்தொகுதியினருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஜே.ஜே. ரத்னசிரி**
**செயலாளர்,**
**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
**தலைவர், நிருவாக சபை**

## பணிப்பாளர் நாயகத்தின் ஆசிச் செய்தி

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது நாம் அதிக எண்ணிக்கையிலான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளோம். 2019 ஆம் ஆண்டிற்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையினுள் இச்சுருக்க ஆசிச் செய்தியை சேர்க்கக்கிடைத்தமையிட்டு நான் மட்டிலா மகிழ்ச்சியடைகின்றேன். எமது நாட்டின் முகாமைத்துவ மட்டத்திலுள்ள அரச உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்காக செயற்படுகின்ற முன்னணி வகிக்கும் நிறுவனமாக இது விளங்குகின்றது. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் இவ்வாண்டில் 3014 எண்ணிக்கையுடைய உத்தியோகத்தர்களுக்கு 70 அளவு நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக நடாத்த முடியுமாக இருந்தது.

மீளாய்வு ஆண்டினுள், SLAS(Open), SLAS(Limited), SLSS, SLEngS, SLPS(Open), SLPS(Limited), AO (Open) and AO (Limited), போன்ற சேவைகளுக்குரித்தான புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு 11 சேவைத் துவக்கப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்த எமக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு, அவற்றில் 1159 உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தார்கள். ஒருசில நிகழ்ச்சித்திட்டங்களை ஒரே தடவையில் நடாத்த முற்பட்டமை காரணமாக, இருக்கின்ற பணியாட்தொகுதியினர், வகுப்பறைகள், தங்குமிட வசதிகள் மற்றும் உணவருந்துவதற்கான வசதிகள் என்பன அளவினை விடக் கூடுதலாக பயன்படுத்த வேண்டி ஏற்பட்டது. இச்சவாலினை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணியாட்தொகுதியினர் பாரிய அர்ப்பணிப்புடன் வழங்கிய ஒத்துழைப்பு காரணமாக வெற்றியீட்டிக் கொள்ள முடிந்தது. அவர்கள் சுயமாக முன்வந்து நிறுவன வளாகத்தின் ஒருசில இடங்களை வகுப்பறைகளாக மாற்றுவதற்கும் சிற்றுண்டிச் சாலையில் உணவருந்துவதற்கு தற்காலிகமாக அறையொன்றை நிர்மாணிப்பதற்கும் முற்பட்டார்கள். அவர்களின் ஒத்துழைப்பு காணப்படாதுவிடின் அப்பணிகளுக்கு அதிகளவு செலவினை ஏற்க வேண்டி ஏற்படுகின்றது. அவ்வாறான பாராட்டத்தக்க குழு ரீதியான உணர்வு பணியாட்தொகுதி அங்கத்தவர்களிடம் காணப்படுகின்றதையிட்டு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் விழாவில் உற்பத்தி மற்றும் சேவைகள் வகுதியின் கீழ் 03 ஆம் இடத்தைப் பெற்று வெற்றியீட்டிக் கொண்டமை நாம் அடைந்த சிறப்புக்களில் ஒன்றாகும். அவ்வாறே 2019 ஆம் ஆண்டு சனாதிபதி சுற்றுச்சூழல் விருது வழங்கும் விழாவில் அரச நிறுவன வகுதியின் கீழ் பெருமைமிகு வெள்ளி விருதினை வெற்றியீட்டிக் கொள்ளக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது.

இலங்கை நிர்வாக சேவையில் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் ஒருசிலரினால் எழுத்துருவாக்கம் செய்யப்பட்ட நூல்கள் அவர்களின் சேவைத் துவக்கப் பயிற்சிக் காலப்பிரிவினுள்ளே வெளியிடப்பட்டமை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினை ஊக்கப்படுத்தியுள்ளதாகவும் குறிப்பிட முடியும். அந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக பங்கேற்று உரையாற்றிய பல விருதுகளைப் பெற்ற எழுத்தாளரான திருமதி சுமித்ரா ராஹுபந்த அவர்கள் அவ்வுத்தியோகத்தர்களின் எழுத்தாற்றலை பாராட்டிப் பேசினார்கள். நாம் அரச சேவையில் கடமையாற்றும் போதே மக்களின் அறிவு மற்றும் கலாசார வாழ்க்கையை வளப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்ய முடியுமான வகையில் அரச ஊழியர்களின் புதியதொரு பரம்பரையை உருவாக்கி அவர்களின் வாசிப்பு மற்றும் எழுத்தாற்றலை உயர் மட்டத்தை நோக்கி மேம்படுத்தும் வகையில் ஊக்குவிப்பது எமது இலக்காகும். மேலும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பட்டப் பின் பட்டக் கற்கைப் பாடசாலை மற்றும் அதில் அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் பட்டக் கற்கைப் பாடநெறி புதிய குழுவினரின் கற்கை நடவடிக்கைகள் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதோடு அதற்காக தற்சமயம் 78 பேர் பதிவுசெய்துள்ளார்கள். அவ்வாறே அவ்வருட ஜுன் மாதத்தில் நடைபெற்ற பட்டம் வழங்கும் விழாவில் அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்டத்தை 174 பட்டதாரிகள் பெற்றுக்கொண்டார்கள்.

இறுதியாக, இவ்வனைத்து வெற்றிகளையும் அடைந்து கொள்வதற்கு, கௌரவ அமைச்சர் மற்றும் நிர்வாக சபைத் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்கள் வழங்கிய வழிகாட்டுதல் மற்றும் ஆலோனைகள் தொடர்பாக எனது நன்றியை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வாறே வெற்றிகரமான ஆண்டொன்றினை அடைந்து கொள்வதற்கு சளைக்காமல் உழைத்த இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணியாட்தொகுதியினரின் அர்ப்பணிப்பையும் நான் மிகவும் பாராட்டுகின்றேன்.

**கே. எம். எஸ். டீ. ஜயசேகர**
**பணிப்பாளர் நாயகம் (Acting)**

## 02. நிதிப் பிரிவின் முக்கிய நிகழ்வுகள்

**இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்**

**நிதி நிலைமை தொடர்பான அறிக்கை**

**2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு**

| | குறிப்பு | 2019 | 2018 |
|---|---|---|---|
| | | ரூபா. சதம். | ரூபா. சதம். |
| **சொத்து** | | ரூபா. சதம். | ரூபா. சதம். |
| **நடப்புச் சொத்துக்கள்** | | | |
| வங்கி நிலுவை | 03 | 22,918,072.02 | 72,042,623.13 |
| வைப்பிலிடப்படாத கிடைப்பனவுகள் | | - | 525,555.04 |
| மூன்று மாத வைப்புக்கள் | 04 | 302,291,319.34 | 290,170,307.53 |
| கிடைப்பனவுகள் | 05 | 22,058,329.11 | 29,937,094.12 |
| கையிருப்பில் உள்ள பங்கு | 06 | 5,861,336.98 | 4,518,286.49 |
| முன்னைய கொடுப்பனவுகள் | 07 | 3,480,761.33 | 3,429,902.43 |
| முற்பணம் | 08 | 293,340.64 | 1,940,973.56 |
| ஊழியர்களின் கடன் தொகை | 09 | 16,059,835.13 | 15,432,939.82 |
| | | 372,962,994.55 | 417,997,682.12 |
| **நடப்பற்ற சொத்துக்கள்** | | | |
| சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 10 | 421,105,571.58 | 430,251,113.63 |
| நடைபெற்றுச் செல்லும் வேலைகள் (மூலதனம்) | | 1,644,343.69 | - |
| பணிக்கொடை நிதி முதலீடு | 11 | 38,081,659.54 | 34,776,276.63 |
| வைப்புக் கணக்கு | 12 | 1,299,500.00 | 1,299,500.00 |
| | | 462,131,074.81 | 466,326,890.26 |
| **மொத்த சொத்துக்கள்** | | 835,094,069.36 | 884,324,572.38 |
| **பொறுப்புக்கள்** | | | |
| நடப்பு பொறுப்பு | | | |
| செலுத்த முடியுமான வைப்புக்கள் | 13 | 21,812,011.68 | 49,422,542.51 |
| காலம் தாழ்த்திய கிடைப்பனவுகள் | 14 | 105,846,522.47 | 93,686,228.51 |
| பெருகிய செலவு | 15 | 3,115,638.71 | 25,431,601.95 |
| தொங்கல் கிடைப்பனவுகளுக்கான நிதி ஒதுக்கீடு | | 4,322,607.91 | 3,669,302.08 |
| | | 135,096,780.77 | 172,209,675.05 |
| **நடப்பற்ற பொறுப்புக்கள்** | | | |
| தொலைக் கல்வி நிலையம் | 16 | 21,515,765.39 | 23,170,823.72 |
| பணிக்கொடைக்கான நிதி ஒதுக்கீடு | 17 | 32,939,816.50 | 29,614,322.20 |
| | | 54,455,581.89 | 52,785,145.92 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | 189,552,362.66 | 224,994,820.97 |
| **தேறிய சொத்துக்கள்** | | 645,541,706.70 | 659,329,751.41 |
| **தேறிய சொத்துக்கள் - சம பங்குகள்** | | | |
| தாமதான வருமானம் - திறைசேரி நன்கொடை | | 564,544,388.88 | 595,232,238.83 |
| ஏனைய இருப்புக்கள் - சொத்து மீள் மதிப்பீட்டு இருப்பு | 18 | 12,015,807.00 | 12,015,807.00 |
| திரண்ட மிகை / மீதி | 19 | 68,981,510.82 | 52,081,705.58 |
| **மொத்த தேறிய சொத்துக்கள்- சம பங்குகள்** | | 645,541,706.70 | 659,329,751.41 |

**இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்**
**2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான**
**நிதிச் செயலாற்றுகை தொடர்பான அறிக்கை**

| | குறிப்பு | 2019 | 2018 |
|---|---|---|---|
| | | ரூபா. சதம். | ரூபா. சதம். |
| **வருமானம்** | | | |
| திறைசேரியின் பங்களிப்பு | 20 | 168,977,849.95 | 133,612,634.37 |
| ஏனைய வருமானங்கள் | | | |
| பாடநெறிக் கட்டணம் | 21 | 155,740.00 | 1,571,500.00 |
| மண்டபங்களை வாடகைக்கு வழங்குதல் | | 21,975,030.00 | 18,553,241.50 |
| வெளியீடுகளின் விற்பனை | | 98,932.00 | 434,654.50 |
| முதலீட்டின் அடிப்படையில் வருமானம் | 22 | 31,718,528.53 | 31,856,460.09 |
| கடன் வட்டி | | 664,924.88 | 667,962.13 |
| வாடகை | 23 | 13,658,393.83 | 16,405,920.17 |
| குத்தகைக்கான வாடகை | | 1,655,058.33 | 1,655,058.83 |
| பட்டப்பின் பட்ட கற்கைப் பாடசாலை | | 9,945,276.58 | 17,487,414.44 |
| மொழி நிகழ்ச்சித்திட்டம் | | 1,162,445.75 | 10,875,500.00 |
| ஆலோசனைச் சேவை | 24 | 51,648,093.20 | 33,805,397.26 |
| நிறுவகப் பங்குகளின் வருமானம் | | 10,356,757.41 | 16,782,713.75 |
| நானாவித வருமானம் | 25 | 16,113,053.31 | 18,631,860.82 |
| **மொத்த வருமானம்** | | 328,130,083.77 | 302,340,317.86 |
| **செலவுகள்** | | | |
| தனிநபர் ஊதியம் | 26 | 108,954,116.89 | 100,923,950.47 |
| ஊழியர் நலன்புரி | 27 | 4,136,515.72 | 3,869,863.80 |
| போக்குவரத்து கண்காணிப்பும் கொடுப்பனவுகளும் | 28 | 1,099,719.02 | 4,393,844.63 |
| பயன்பாடுகளும் ஏனைய சேவைகளும் | 29 | 34,919,536.08 | 36,630,134.29 |
| போக்குவரத்து | 30 | 3,132,607.90 | 3,913,840.52 |
| நிலையான சொத்துக்களைப் பழுதுபார்த்தலும் பராமரிப்பும் | 31 | 4,480,273.43 | 5,459,151.92 |
| வழங்கல் மற்றும் தேவைகள் | 32 | 9,178,130.49 | 9,493,108.15 |
| நிதியியல் கட்டணங்கள் | 33 | 3,191,853.99 | 3,609,061.04 |
| வாசிகசாலைச் சேவை | 34 | 344,093.50 | 431,271.50 |
| பயிற்சி மற்றும் மதிப்பீடுகள் | 35 | 1,181,402.21 | 1,756,600.85 |
| வெளியீடுகளும் தகவல் சேவையும் | 36 | 316,800.00 | 0.00 |
| வெளிநாட்டுப் பயிற்சிகள் மற்றும் கல்விச் சுற்றுலா | 36-A | 32,007,008.68 | 59,111,650.38 |
| பெறுமானத் தேய்வு | 37 | 37,245,423.64 | 39,720,093.64 |
| பட்டப்பின் பட்ட கற்கைப் பாடசாலை | 38 | 8,961,528.54 | 7,793,566.08 |
| ஆங்கில மொழி நிகழ்ச்சித்திட்டம் | 39 | 2,386,103.58 | 3,916,965.00 |
| ஆலோசனைச் சேவை | 40 | 51,648,093.20 | 33,805,397.36 |
| பணிக்கொடை ஒதுக்கீடுகள் | | 4,475,874.30 | 3,223,949.00 |
| நிச்சயமற்ற கிடைப்பனவுகளுக்கான ஒதுக்கீடு | | 653,305.83 | 447,852.08 |
| வெளியீடுகளுக்கான செலவு | | 0.00 | 268,498.50 |
| **மொத்த செலவு** | | 308,312,387.00 | 318,768,799.21 |
| **காலப்பகுதிக்கான மிகை / (பற்றாக்குறை)** | | 19,817,696.77 | (16,428,481.35) |

**இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்**
**2019 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான**
**காசுப் பாய்ச்சல் தொடர்பான அறிக்கை**

**செயற்பாட்டு செயற்பாடுகளினால் ஏற்பட்ட காசுப் பாய்ச்சல்கள்**

| | 2019<br>ரூபா. சதம். | 2018<br>ரூபா. சதம். |
|---|---|---|
| **வருடத்திற்கான தேறிய மிகை / பற்றாக்குறை** | **19,817,696.77** | **(16,428,481.35)** |
| நிதி இயக்கத்தின் பால் தாக்கம் செலுத்தாத விடயங்களுக்கான சீராக்கம் | | |
| பெறுமானத் தேய்வுகள் | 37,245,423.64 | 39,720,093.64 |
| கடன் தீர் நிதி மூலம் கடனைத் தீர்த்தல் | (30,687,849.95) | (31,602,634.37) |
| பணிக்கொடைக்கான நிதி ஒதுக்கீடு | 4,475,874.30 | 3,223,949.00 |
| தொங்கல் கிடைப்பனவுகளுக்கான நிதி ஒதுக்கீடு | 653,305.83 | 447,852.08 |
| கடந்த ஆண்டுக்கு உரித்தான செம்மையாக்கம் | (2,917,891.53) | (8,937,954.25) |
| அகற்றல் | 0.00 | 0.00 |
| **பணி மூலதன மாற்றங்களுக்கு முன்னர் செயற்பாட்டு மிகை (பற்றாக்குறை)** | **28,586,559.06** | **(13,577,175.25)** |
| கையிருப்பு குறைப்புக்கள் (அதிகரித்தல்) | (1,343,050.50) | (1,420,707.02) |
| முற்பணக் குறைப்புக்கள் (அதிகரித்தல்) | 1,647,632.92 | 3,774,146.78 |
| முன்னைய கொடுப்பனவுகளின் குறைப்புக்கள் (அதிகரித்தல்) | 50,858.90 | 1,501,914.54 |
| பணியாட்தொகுதியினருக்கான கடன் குறைப்புகள் (அதிகரித்தல்) | (626,895.30) | (396,146.48) |
| கிடைக்கப்பெற வேண்டியவற்றின் குறைப்புக்கள் (அதிகரித்தல்) | 7,878,765.01 | 6,863,601.42 |
| வைப்புச் செய்யப்பட்ட கிடைப்பனவுகளின் அதிகரிப்பு (அதிகரித்தல்) | | (405,178.54) |
| செலுத்தப்பட வேண்டிய வைப்புக்களின் அதிகரிப்பு (குறைத்தல்) | (27,619,569.16) | 26,270,646.14 |
| பெருகிய செலவுகளின் அதிகரிப்பு (குறைத்தல்) | (22,315,963.24) | 5,445,948.95 |
| நடாத்திச் செல்லும் வேலைகளின் அதிகரிப்பு (குறைத்தல்) | (1,644,343.69) | |
| ஆலோசனைச் சேவைகளின் (குறைத்தல்) | 12,160,293.96 | 14,265,026.68 |
| **செயற்பாட்டுச் செயற்பாடுகளின் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல்** | **(31,812,271.10)** | **55,899,252.47** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளின் ஊடான காசுப் பாய்ச்சல்** | | |
| கட்டிடங்களைக் கையகப்படுத்தல் | (12,587,715.08) | (22,604,893.70) |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகளைக் கையகப்படுத்தல் | (3,577,769.79) | (10,557,267.55) |
| அலுவலக உபகரணங்களைக் கையகப்படுத்தல் | (2,854,481.65) | (5,584,337.92) |
| மின் திரைகளைக் கையகப்படுத்தல் | (4,425,536.40) | (5,134,045.18) |
| கணனிகளை கையகப்படுத்தல் | (2,810,489.80) | (5,868,750.00) |
| மென் பொருட்கள் தொகுப்பை கையகப்படுத்தல் | 0.00 | (2,940,695.75) |
| புத்தகங்களைக் கையகப்படுத்தல் | (712,063.30) | (953,865.93) |
| ஏனைய சொத்துக்களைக் கையகப்படுத்தல் | (1,224,498.54) | (3,900,029.50) |
| செலுத்தப்பட்ட பணிக்கொடைகள் | (1,150,386.00) | (2,603,633.00) |
| பணிக்கொடை நிதியை முதலீடு செய்தல் | (3,305,382.91) | (3,184,709.21) |
| குறுகிய கால வைப்புக்கள் | (12,121,011.81) | (22,124,119.52) |
| பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கப்பெற்ற நிதி | | 0.00 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளின் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல்** | **(44,769,335.28)** | **(85,456,347.26)** |
| **நிதிச் செயற்பாடுகளின் மூலம் கிடைத்த காசுப் பாய்ச்சல்** | | |
| அரச நன்கொடைகள் - மூலதனம் | 0.00 | 112,780,000.00 |
| தொலைக் கல்வி நிலையத்தின் அதிகரிப்பு (குறைதல்) | (1,655,058.83) | (1,655,058.83) |
| **நிதிச் செயற்பாடுகளின் மூலம் கிடைத்த காசுப் பாய்ச்சல்** | **(1,655,058.83)** | **111,124,941.17** |
| நிதி மற்றும் நிதி சமநிலைப்படுத்தலின் தேறிய விருத்தி / (குறைதல்) | (49,650,106.15) | 67,990,671.12 |
| காலப் பகுதியின் ஆரம்பத்தில் உள்ள நிதி மற்றும் நிதி சமநிலைப்படுத்தல்கள் | 72,568,178.17 | 4,051,952.01 |
| **காலப் பகுதியின் முடிவில் உள்ள நிதி மற்றும் நிதி சமநிலைப்படுத்தல்கள்** | **22,918,072.02** | **72,042,623.13** |

**இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்**

**2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டு மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான**

**தேறிய சொத்துக்கள் / சம பங்குகளின் மாற்றம் தொடர்பான அறிக்கை**

| | கட்டுப்பாட்டு நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு உரித்தாகும் | | | |
|---|---|---|---|---|
| | பங்களிப்பு மூலதனம் | ஏனைய இருப்புக்கள் | திரண்ட மிகை / (பற்றாக்குறை) | மொத்த தேறிய சொத்துக்கள் / சம பங்குகள் |
| | ரூ.ச. | ரூ.ச. | ரூ.ச. | ரூ.ச. |
| **2018 சனவரி மாதம் 01 ஆந் திகதிக்கான நிலுவை** | 514,054,873.20 | 12,015,807.00 | 77,448,141.18 | 603,518,821.38 |
| **கணக்கீட்டுக் கொள்கைகள் மாற்றமுறல்** | | | | |
| கணக்கீட்டுக் கொள்கை மாற்றமடைதல் | | | | |
| முன்னைய வருடத்துக்கு உரித்தான சீராக்கம் | | | (8,937,954.25) | (8,937,954.25) |
| மீண்டும் அறிக்கையிடப்பட்ட நிலுவை | **514,054,873.20** | **12,015,807.00** | **68,510,186.93** | **594,580,867.13** |
| **2018 ஆம் ஆண்டிற்கான தேறிய சொத்துக்கள் / சம பங்குகள் மாற்றமடைதல்** | | | | |
| திறைசேரியினால் கிடைக்கப்பெற்ற பங்களிப்பு - மூலதனம் | 112,780,000.00 | | | 112,780,000.00 |
| ஒத்திவைக்கப்பட்ட வருமான கடன் தீர் நிதி மூலம் கடன் குறைத்தல் | (31,602,634.37) | | | (31,602,634.37) |
| காலப் பகுதிக்கான மிகை / பற்றாக்குறை | | | (16,428,481.35) | |
| **முன்கொண்டு செல்லப்பட்ட 2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான நிலுவை** | **595,232,238.83** | **12,015,807.00** | **52,081,705.58** | **675,758,232.76** |
| **2019 சனவரி மாதம் 01 ஆந் திகதிக்கான நிலுவை** | 595,232,238.83 | 12,015,807.00 | 52,081,705.58 | 659,329,751.41 |
| **கணக்கீட்டுக் கொள்கைகள் மாற்றமுறல்** | | | | |
| கணக்கீட்டுக் கொள்கை மாற்றமடைதல் | - | | | |
| முன்னைய வருடத்துக்கு உரித்தான சீராக்கம் | | | **(2,917,891.53)** | **(2,917,891.53)** |
| மீண்டும் அறிக்கையிடப்பட்ட நிலுவை | **595,232,238.83** | **12,015,807.00** | **49,163,814.05** | **656,411,859.88** |
| **2019 ஆம் ஆண்டிற்கான தேறிய சொத்துக்கள் / சம பங்குகள் மாற்றமடைதல்** | | | | |
| திறைசேரியினால் கிடைக்கப்பெற்ற பங்களிப்பு - மூலதனம் | - | | | |
| ஒத்திவைக்கப்பட்ட வருமான கடன் தீர் நிதி மூலம் கடன் குறைத்தல் | (30,687,849.95) | | | (30,687,849.95) |
| காலப் பகுதிக்கான மிகை / பற்றாக்குறை | | | 19,817,696.77 | 19,817,696.77 |
| **முன்கொண்டு செல்லப்பட்ட 2019 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான நிலுவை** | **564,544,388.88** | **12,015,807.00** | **68,981,510.82** | **645,541,706.70** |

| | கட்டுப்பாட்டு நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு உரித்தாகும் | | | |
|---|---|---|---|---|
| | பங்களிப்பு மூலதனம் | ஏனைய இருப்புக்கள | திரண்ட மிகை / (பற்றாக்குறை ) | மொத்த தேறிய சொத்துக்கள் / சம பங்குகள் |
| | ரூ.ச. | ரூ.ச. | ரூ.ச. | ரூ.ச. |
| **2019 சனவரி மாதம் 01 ஆந் திகதிக்கான நிலுவை** | **478,753,816.81** | **12,015,807.00** | **64,779,745.20** | **555,549,369.01** |
| **கணக்கீட்டுக் கொள்கைகள் மாற்றமுறல்** | | | | |
| கணக்கீட்டுக் கொள்கை மாற்றமடைதல் | | | | |
| முன்னைய வருடத்துக்கு உரித்தான சீராக்கம் | | | (3,372,257.53) | (3,372,257.53) |
| மீண்டும் அறிக்கையிடப்பட்ட நிலுவை | **478,753,816.81** | **12,015,807.00** | **61,407,487.67** | **552,177,111.48** |
| **2017 ஆம் ஆண்டிற்கான தேறிய சொத்துக்கள் / சம பங்குகள் மாற்றமடைதல்** | | | | |
| திறைசேரியினால் கிடைக்கப்பெற்ற பங்களிப்பு - மூலதனம் | 62,950,000.00 | - | - | 62,950,000.00 |
| ஒத்திவைக்கப்பட்ட வருமான கடன் தீர் நிதி மூலம் கடன் குறைத்தல் | (27,648,943.61) | | | (27,648,943.61) |
| காலப் பகுதிக்கான மிகை / பற்றாக்குறை | - | - | 16,040,653.51 | 16,040,653.51 |
| **முன்கொண்டு செல்லப்பட்ட 2017 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான நிலுவை** | **514,054,873.20** | **12,015,807.00** | **77,448,141.18** | **603,518,821.38** |
| **2018 சனவரி மாதம் 01 ஆந் திகதிக்கான நிலுவை** | **514,054,873.20** | **12,015,807.00** | **77,448,141.18** | **603,518,821.38** |
| **கணக்கீட்டுக்கொளகையில் மாற்றம் ஏற்படுதல்.** | | | | |
| கணக்கீட்டுக் கொள்கை மாற்றமடைதல் | | | | - |
| முன்னைய வருடத்துக்கு உரித்தான சீராக்கம் | | | (11,536,551.39) | (11,536,551.39) |
| மீண்டும் அறிக்கையிடப்பட்ட நிலுவை | **514,054,873.20** | **12,015,807.00** | **65,911,589.79** | **591,982,269.99** |
| **2018 ஆம் ஆண்டிற்கான தேறிய சொத்துக்கள் / சம பங்குகள் மாற்றமடைதல்** | | | | |
| திறைசேரியினால் கிடைக்கப்பெற்ற பங்களிப்பு - மூலதனம் | | | | |
| ஒத்திவைக்கப்பட்ட வருமான கடன் தீர் நிதி மூலம் கடன் குறைத்தல் | | | | |
| காலப் பகுதிக்கான மிகை / பற்றாக்குறை | | | | |
| **முன்கொண்டு செல்லப்பட்ட 2018 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான நிலுவை** | **514,054,873.20** | **12,015,807.00** | **65,911,589.79** | **591,982,269.99** |

## 3. ஆளுநர் சபையின் அங்கத்தவர்கள்

1982 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகச் சட்டத்தின் பிரிவு 6 (1) இற்கு இணங்க கௌரவ அரசாங்க நிர்வாக அமைச்சரினால் பின்வரும் ஆட்கள் 2019 ஆம் ஆண்டுக்காக நிறுவனத்தின் ஆளுநர் சபைக்கு நியமிக்கப்பட்டனர்.

**திரு. ஜே.ஜே. ரத்னசிரி** - **தலைவர்**
செயலாளர் (2019.02.28 ஆந் திகதி முதல் 2018.05.21 ஆந் திகதி வரை)
பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

**திரு. சமன் ஏகநாயக** - **அங்கத்தவர்**
பிரதம மந்திரியின் செயலாளர் (2019.02.28 ஆந் திகதி முதல் 2018.05.21 ஆந் திகதி வரை) பிரதம மந்திரியின் அலுவலகம்

**திரு. எம். எம். ஜீ. கே. மாயாதுன்ன** - **அங்கத்தவர்**
செயலாளர், (2019.02.28 ஆந் திகதி முதல் 2018.05.21 ஆந் திகதி வரை)
நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு

**திரு. எச்.ரீ. கமல் பத்மசிரி** - **அங்கத்தவர்**
செயலாளர் (2019.02.28 ஆந் திகதி முதல் 2018.05.21 ஆந் திகதி வரை)
உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**திரு. எச்.எம். காமினி செனவிரத்ன** - **அங்கத்தவர்**
செயலாளர், (2019.02.28 ஆந் திகதி முதல் 2018.05.21 ஆந் திகதி வரை)
உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

**காமினி கே. பீ. ரத்நாயக** - **அங்கத்தவர்**
(2019.02.28 ஆந் திகதி முதல் 2018.05.21 ஆந் திகதி வரை)

**திரு. பி.பீ.எஸ்.சீ. நோனிஸ்** - **அங்கத்தவர்**
பணிப்பாளர் நாயகம் (2019.02.28 ஆந் திகதி முதல் 2018.05.21 ஆந் திகதி வரை)
தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம்

**திரு. டி.ஏ. விஜித் மஹேந்திர ரத்னசேகர** - **அங்கத்தவர்**
(2019.02.28 ஆந் திகதி முதல் 2018.05.21 ஆந் திகதி வரை)

**திரு. எஸ். சுரேஷ் சீ பெர்னாண்டோ** - **அங்கத்தவர்**
(2019.02.28 ஆந் திகதி முதல் 2018.05.21 ஆந் திகதி வரை)

**திரு. கீர்த்தி பண்டார கொடகமகே** - **அங்கத்தவர்**
இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் (திற்கடமை) (2019.02.28 ஆந் திகதி முதல் 2018.05.21 ஆந் திகதி வரை)

**திருமதி. கே. எம்.எஸ்.டி. ஜயசேகர** - **அங்கத்தவர்**
பணிப்பாளர் நாயகம் (ப.க) இ.அ.நி.நி. (2019.02.28 ஆந் திகதி முதல் 2018.05.21 ஆந் திகதி வரை)

## 4. சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் கல்விசார் ஊழியர் குழாம்

**திருமதி கே.எம்.எஸ்.டி. ஜயசேகர**
**பணிப்பாளர் நாயகம் (ப.க.) (2018.09.28 ஆந் திகதி முதல் 2018.12.31 ஆந் திகதி வரை)**
மேலதிகப் பணிப்பாளர் நாயகம்
(கற்கைகள் மற்றும் அபிவிருத்தி)
இ.நி.சே. விசேட தரம்
அரசாங்க நிர்வாகம் தொடர்பான பட்டப் பின் பட்டம், முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் கற்கைகள் நிறுவனம், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்,
இலங்கை உபாய முறை மனித வள முகாமை தொடர்பான பட்டப் பின் பட்டம், விக்டோரியா பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா
முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் பட்ட டிப்ளோமா, PIM, இலங்கை
விஞ்ஞானமானி (உயிரியல்) பட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம், இலங்கை

**திருமதி ஜீ.டபிள்யு. ராஜபக்ஷ**
**மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (நிருவாகம் மற்றும் நிதி)**
**(2019.01.01 ஆந் திகதி முதல் 2019.09.03 ஆந் திகதி வரை)**
இ.நி.சே. விசேட தரம்
வியாபார நிருவாகப் பட்டப் பின் பட்டம், மொனாஷ் பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா
முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் பட்ட டிப்ளோமா, ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம், இலங்கை
சர்வதேச உறவுகள் தொடர்பான பட்டப் பின் பட்ட டிப்ளோமா, (Merit Pass), பண்டாரநாயக சர்வதேச கற்கைகள் நிலையம்
வியாபார நிர்வாகம் தொடர்பான விஞ்ஞானமானி (விசேட) பட்டம் (இரண்டாம் வகுப்பு கீழ்நிலைச் சித்தி) ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம், இலங்கை

**திரு. ஜே.எஸ்.பீ. பியசேன**
**மேலதிகப் பணிப்பாளர் நாயகம் - பதிற்கடமை (நிர்வாகம் மற்றும் நிதி)**
**2019.11.01 ஆந் திகதி தொடக்கம்**
**பணிப்பாளர் ( தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட மேம்பாடு)**
**.இ. நி. சே (தரம் I)**
சமூகவியல் தொடர்பான பட்டப் பின் பட்டம் , களனி பல்கலைக்கழகம்.
பிரயோக விஞ்ஞானம் தொடர்பாக விஞ்ஞானமானிப் பட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம், இலங்கை

**கலாநிதி எஸ். ஆர். எஸ். என். சுபசிங்க**
**பதிற் கடமையாற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகம்** (PGDS)
**2019.11.01 ஆந் திகதி முதல்**
**சிரேஷ்ட ஆலோசகர், கல்வி ஒருங்கிணைப்பாளர் - பட்டப்பின் பட்டப் பாடசாலை**
அபிவிருத்தி நிர்வாகம் தொடர்பான கலாநிதிப் பட்டம், (அரச கொள்கை முகாமை தொடர்பாக விசேட), விஞ்ஞான முதுமானி (பொருளியல்), கொழும்பு பல்கலைக்கழகம்,
பொருளாதார அபிவிருத்தி தொடர்பான பட்டப் பின் டிப்ளோமா (கொழும்பு பல்கலைக்கழகம்),
இளமானிப் பட்டம் ( கௌரவ) ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம், இலங்கை

### 4.1. உள்ளக கல்விசார் ஊழியர்களின் விபரம்

**திருமதி என்.ஜே. ஜயசுந்தர**
**சிரேஷ்ட ஆலோசகர்**
விஞ்ஞான முதுமானி (சுற்றாடல் பொருளியல்) தொ.ப.பி.நி. PGIA (பேராதனை)
விவசாய விஞ்ஞானமானி (கௌரவ) பட்டம் பேராதனைப் பல்கலைக்கழகம்
சுற்றாடல் முகாமை தொழில்சார் சான்றிதழ் (CDG ஜேர்மன்)

**திரு. டபிள்யு.எம்.எம்.ஜீ.டி. விஜேகோன்**
**சிரேஷ்ட ஆலோசகர்**
விஞ்ஞானமானி (நகரப்புற சுற்றாடல் முகாமைத்துவம்)
AIT - தாய்லாந்து
முதுகலைமானி (கௌரவ), புவியியல், கொழும்புப் பல்கலைக்கழகம்

**திரு. ஏ. லொகுகமகே**
**சிரேஷ்ட ஆலோசகர்**
இ.க.சே (தரம் I)
முதுகலைமானி (நிதிப் பொருளாதார விஞ்ஞானம்), கொழும்புப் பல்கலைக்கழகம்
பட்டப் பின் பட்ட டிப்ளோமா (பொருளாதார அபிவிருத்தி)
பட்டப் பின் பட்ட டிப்ளோமா (கூட்டிணைவு மற்றும் உபாய முறை நிதியீட்டம்)
HNDA, DPFM, DIPPCA, Dip in IT, MAAT

**திருமதி ஆர். திஸாநாயக - வழக்கறிஞர்**
**சிரேஷ்ட ஆலோசகர்**
இ.நி.சே (தரம் I)
சத்தியப் பிரமாண ஆணையாளர்
விஞ்ஞான முதுமானி அரச முகாமைத்துவம் (செயற்திட்ட முகாமை)
சர்வதேச உறவுகள் தொடர்பான பட்டப் பின் பட்ட டிப்ளோமா
சட்டவாதி, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
விஞ்ஞானமானி (கௌரவ), களனிப் பல்கலைக்கழகம்
DIPPCA.

**திருமதி ரீ. அபேவர்தன**
**சிரேஷ்ட ஆலோசகர்**
இ.நி.சே (தரம் I)
சர்வதேச உறவுகள் பற்றிய பட்டப் பின் பட்டம், ICU, டோக்கியோ, ஜப்பான்
வியாபார முகாமை தொடர்பான பட்டப் பின் பட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம்
சூழலியல் தொடர்பான பட்டப் பின் பட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம்
ஈ - நிர்வாகம் பற்றிய பட்டப் பின் பட்டம் ,பட்டப் பின் கற்கை நிறுவனம், (PIM) ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்
விலங்கியல் விஞ்ஞானமானி (சிறப்பு) பட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம்
அரசாங்க நிர்வாகம் தொடர்பான டிப்ளோமா, இ.அ. நி. நி.

**திரு. கே.ஆர். கங்காதார**
**சிரேஷ்ட ஆலோசகர்**
2019.11.01 ஆந் திகதி முதல் பதிற்கடமையாற்றும் பணிப்பாளர் (நிர்வாகம்)
இ.நி.சே. (தரம் I)
சர்வதேச மற்றும் அபிவிருத்திப் பொருளியல் தொடர்பான பட்டப் பின் பட்ட டிப்ளோமா, (ANU, - அவுஸ்திரேலியா)
விஞ்ஞானமானி புவியியல் பட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம்
அரசாங்க நிர்வாகம் தொடர்பான டிப்ளோமா, இ. அ. நி. நி.

**திரு. எம்.எஸ். அநுருத்த**
**சிரேஷ்ட ஆலோசகர் (2018.02.28 ஆந் திகதி முதல்)**
இ.க.சே (தரம் I)
முதுகலைமானி பொருளியல் பட்டம், களனிப் பல்கலைக்கழகம்
வியாபார நிர்வாக பட்டப் பின் பட்டம், இராஜரட்டை பல்கலைக்கழம்
சர்வதேச உறவுகள் தொடர்பான பட்டப் பின் பட்ட டிப்ளோமா, பண்டாரநாயக சர்வதேச கற்கைகள் நிலையம்
விஞ்ஞானமானி (கௌரவ) சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

**திரு. எஸ்.டி.என்.யூ. சேனாதீர**
**சிரேஷ்ட ஆலோசகர் (2018.12.07 ஆந் திகதி முதல்)**
அரசாங்க நிர்வாகப் பட்டப் பின் பட்டம், ∴பிலிண்டர்ஸ் பல்கலைக்கழகம், அடிலேட், அவுஸ்திரேலியா
மொழியியல் பட்டப் பின் பட்டம், களனிப் பல்கலைக்கழகம்
கலைமானிப் பட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம்

**திரு. கே. பிரசன்ன சந்தித்**
**சிரேஷ்ட ஆலோசகர்**
**இ.நி.சே (விசேட தரம் )**
பொது நிர்வாக ம் தொடர்பான பட்டப் பின் பட்டம், இராஜரட்டை பல்கலைக்கழம்
விஞ்ஞானமானிப் பட்டம், பேராதனைப் பல்கலைக்கழகம்
நிலைபேறான அபிவிருத்தி கல்வி டிப்ளோமா ஞ்யளவயடயருளைநசளவைல ஸ்வீடன் பல்கலைக்கழகம்
அரச முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா (ஸ்வீடன்)

**திரு. ஷாந்த வீரசிங்க**
**சிரேஷ்ட ஆலோசகர் ( 2019.12.02 ஆந் திகதி முதல் )**
**இ. நி. சே. ( தரம் 1)**
ஏற்பாட்டு முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞான முதுமானிப் பட்டம், பேராதெனிய பல்கலைக்கழகம்
கல்வியியல் தொடர்பான பட்டப் பின் பட்ட டிப்ளோமா, கொழும்பு பல்கலைக்கழகம்
ஈ - நிர்வாகம் தொடர்பான பட்டப் பின் பட்ட டிப்ளோமா, முகாமைத்துவ பட்டப் பின் பட்ட நிறுவனம் விஞ்ஞானமானிப் பட்டம், களனி பல்கலைக்கழகம்.
அரச முகாமை தொடர்பான டிப்ளோமா, இ. அ. நி. நிறுவகம்
ஆங்கில மொழி டிப்ளோமா, இ. அ. நி. நி.

**திரு. என்.எம்.எஸ்.ஏ. பண்டார**
**ஆலோசகர்**
தகவல் தொழில்நுட்ப விஞ்ஞான முதுமானிப் பட்டம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம்
விஞ்ஞானமானி ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம், வனவியல் விஞ்ஞான முதுமானிப் பட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

**திரு. எம்.ஆர். பெரேரா**
**உதவி ஆலோசகர்**
செயற்கை அறிவு விஞ்ஞான முதுமானிப் பட்டம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம்
தகவல் தொழில்நுட்ப இளமானிப் பட்டம், கொழும்புப் பல்கலைக்கழக

## 4.2 சேவை வசதிவழங்குநர்களின் விபரங்கள்

**திரு. டி.எஸ். பத்மசிரி**
**பணிப்பாளர் (நிதி)**
**இலங்கை கணக்காளர் சேவை (தரம் 1)**
அரச நிர்வாக விஞ்ஞானமானி (சிறப்புப்) பட்டம்

**திருமதி. ஆர்.ஏ.எஸ்.பீ. ரணவீர**
**பதிவாளர்,**
பட்டப் பின் டிப்ளோமா (ஐனெ. ஆயவாநஅயவைஉள)
விஞ்ஞானமானி (கௌரவ)

**திருமதி ரீ.டி. நாரங்கொட**
**உள்ளகக் கணக்காய்வு**
முதுகலைமானி (பொருளியல்), களனிப் பல்கலைக்கழகம்
பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் வியாபார மற்றும் நிதி நிர்வாகப் பட்டப் பின் டிப்ளோமா BBMtg. மனித வள (சிறப்பு)

**திருமதி பி.ஏ.ஜீ. பாலசூரிய**
**நூலகர்**
நூலக மற்றும் தகவல் விஞ்ஞான பட்டப் பின் பட்டம்
கலைமானி, களனிப் பல்கலைக்கழகம்
முகாமைத்துவ டிப்ளோமா, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

**திருமதி எஸ்.எல்.ஐ. சமரவிக்ரம**
**உதவிப் பதிவாளர்**
முதுகலைமானி (பொருளியல்), களனிப் பல்கலைக்கழகம்
விஞ்ஞானமானி மனித வள முகாமை சிறப்பு பட்டம், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

## 5. பணிகள் மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு

### 5.1 இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் பணிக் கட்டமைப்பு



## 5.2 இ.அ.நி.நிறுவகத்தின் நிருவாகக் கட்டமைப்பு



## 06. பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

### கற்கைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் - 2019

இலங்கையின் அரச துறையிலுள்ள நிறைவேற்று உத்தியோகத்தர்களின் பயிற்சி மற்றும் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் 1982 ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் தாபிக்கப்பட்டது. கற்கைகள் மற்றும் அபிவிருத்தி இவற்றில் முக்கிய பகுதியாக உள்ளதுடன் அவற்றின் மூலம் அரச துறையிலுள்ள உத்தியோகத்தர்களின் திறன் விருத்தித் தேவைகளையப் பூர்த்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்ட கற்கை மற்றும் அபிவிருத்திச் சேவைகள் இதன் மூலம் வழங்கப்படுகின்றன. இப் பணிகளை நிறைவேற்றுவதற்காக, அரச துறையினுள் மாற்றமடையும் திறன் விருத்தித் தேவைகள் மற்றும் இணைந்த நடவடிக்கைகளுடன் செயற்படுவதற்குரிய தேர்ச்சியை வழங்கும் கட்டமைப்பு இப் பிரிவிடம் காணப்படுகின்றது.

அரச துறை அமைப்புக்களின் மற்றும் அவற்றின் முகாமைத்துவ ஊழியர்களினதும் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்காகப் பின்வரும் செயற்பாடுகளை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் மேற்கொள்கின்றது.

1. பின்வரும் நாடளாவிய சேவைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் புதிய உத்தியோகத்தர்களுக்கு சேபை பிரமாணங்களுக்கு ஏற்ப சேவை ஆரம்பப் பயிற்சி நெறிகளை நடாத்துதல் (கட்டணம் அறவிடப்படாத பயிற்சி நெறிகள்)
    - i. இலங்கை நிர்வாக சேவை (இ.நி.சே.)
    - ii. இலங்கை கணக்காளர் சேவை (இ.க.சே.)
    - iii. இலங்கை திட்டமிடல் சேவை (இ.தி.சே.)
    - iv. இலங்கை விஞ்ஞான சேவை (இ.வி.சே.)
    - v. இலங்கை கட்டடக் கலைஞர் சேவை (இ.க.க.சே.)
    - vi. இலங்கை பொறியியலாளர் சேவை (இ.பொ.சே.)
    - vii. இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை (இ.த.தொ.தொ.சே.)

2. வகுப்பு I மற்றும் III மட்டங்களிலுள்ள நாடளாவிய சேவைகளின் உத்தியோகத்தர்களுக்கு கட்டாயமான திறன் விருத்தி நிகழ்ச்சிகள் (கட்டணம் அறவிடப்படாத நிகழ்ச்சிகள்)
3. டிப்ளோமாப் பாடநெறிகள் (கட்டணம் அறவிடப்படுபவை)
4. குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சிகள் (கட்டணம் அறவிடப்படாத நிகழ்ச்சிகள்)
5. தனிப் பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் - அரச துறை நிறுவனங்களினதும் அரச துறைத் தொழில்முயற்சிகளினதும் வேண்டுகோளின் பேரில் நடாத்தப்படுபவை (கட்டணம் அறவிடப்படும் பாடநெறிகள்)
6. முகாமைத்துவ ஆலோசனைகள் (கட்டணம் அறவிடப்படும்)
7. ஏனைய துவக்க நிகழ்ச்சிகள் (கட்டணம் அறவிடப்படும் மற்றும் கட்டணம் அறவிடப்பாத நிகழ்ச்சிகள்)

## 6.1 சேவை ஆரம்பப் பயிற்சிப் பாடநெறிகள்

மேற்படி உரிய சேவைகளின் முன்னோடிகளாச் செயற்படுவதற்காக தேவையான விரிவான வீச்சைக் கொண்ட விடயங்கள் மற்றும் ஏனைய தேவையான அறிவு, தேர்ச்சிகள் மற்றும் மனப்பாங்குகளை வழங்கும் நோக்கில் நாடளாவிய சேவைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் புதிய உத்தியோகத்தர்களுக்காக சேவை ஆரம்பப் பயிற்கள் நடாத்தப்படுகின்றன. பிரதான விடயப் பொறுப்புக்கள் தொடர்பான மொடியூல்களைத் தவிர ஊவா குடாஒய, கொமாண்டோ ரெஜிமேந்து பயிற்சிப் பாடசாலையின் பங்கேற்புடன் வெளிவாரியான பயிற்சியாக தனி நபர்களின் ஆளுமை விருத்திக்காக விசேட நிகழ்ச்சிகள் இப்பயிற்சியில் உள்ளடக்கப்படுகின்றன. மேலும், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் மொழி நிலையத்தினால் மேற்குறித்த சேவை ஆரம்பப் பயிற்சிகளில் ஆங்கில மொழிப் பயிற்சியும் நடாத்தப்பட்டது. ஒரு சில நிகழ்ச்சிகள் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் உதவியுடன் நடாத்தப்பட்டன.

மீளாய்வாண்டில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் நாடளாவிய சேவைகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 1159 உத்தியோகத்தர்களுக்கான 11 சேவை ஆரம்பப் பாடநெறிகளை நடாத்தியதுடன் அப்பயிற்சிநெறிகளின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தொடர் இலக்கம் | சேவை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | இலங்கை நிர்வாக சேவை (திறந்த) | 175 |
| 02. | இலங்கை நிர்வாக சேவை (மட்டுப்படுத்தப்பட்ட) | 48 |
| 03 | இலங்கை கணக்காளர் சேவை (முதற் குழு) | 214 |
| 04. | இலங்கை கணக்காளர் சேவை (இரண்டாம் குழு) | 30 |
| 05. | இலங்கை விஞ்ஞான சேவை (முதற் குழு) | 25 |
| 06. | இலங்கை விஞ்ஞான சேவை (இரண்டாம் குழு) | 35 |
| 07. | இலங்கை பொறியியலாளர் சேவை (05 ஆம் குழு) | 210 |
| 08. | இலங்கை திட்டமிடல் சேவை (மட்டுப்படுத்தப்பட்ட) | 35 |
| 09. | இலங்கை திட்டமிடல் சேவை (திறந்த) | 101 |
| 10. | இலங்கை முகாமைத்துவ உதவியாளர் சேவை - அதிஉயர் தரம் (மட்டுப்படுத்தப்பட்ட) | 143 |
| 11. | இலங்கை முகாமைத்துவ உதவியாளர் சேவை - அதிஉயர் தாரம் (திறன்) | 143 |
| | **மொத்தம்** | **1159** |

### 6.2 நாடளாவிய சேவைகளுக்கான கட்டாய கற்கைகள் மற்றும் அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சிகள்

நாடளாவிய சேவைகளின் உத்தியோகத்தர்களின் தொழில்சார் அபிவிருத்திக்குத் தேவையான அறிவு, திறன்கள் மற்றும் மனப்பாங்குகள் என்பவற்றைத் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்தலும் அதேபோன்று அவற்றின் மூலம் போஷிப்பதும் தனது முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் அடையாளம் கண்டுள்ளது.

நாடளாவிய சேவைகளின் சேவைப் பிரமாணக் குறிப்புக்களின் அடிப்படையில் குறித்த சேவைகளின் ஒவ்வொரு உத்தியோகத்தரும் சேவை ஆரம்பப் பயிற்சி நெறியையும் திறன் விருத்தி நிகழ்ச்சிகளையும் உரிய முறையில் பூர்த்தி செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்துப்பட்டுள்ளது.

அதனால் இந்த உத்தியோகத்தர்கள் மத்தியில் தொடர்ச்சியான கற்றல் கலாசாரமொன்றை உருவாக்குவதற்காகவும் வினைத்திறன்மிக்கதும் பயனுறுதிவாய்ந்ததுமான சேவையினை உறுதிப்படுத்துவதும் முக்கியமான தேவைப்பாடாக உள்ளது. அதனடிப்படையில், நாடளாவிய சேவைகளின் உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் இந்த நிகழ்ச்சிகள் பின்வரும் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

- காலத்துக்குக் காலம் தேவைப்படுவதும் குறிப்பாக அடையாளம் காணப்பட்டுள்ள நடத்தை மற்றும் தொழில்நுட்பங்களை வழங்குதல்.
- துரிதமாக மாற்றமடையும் சூழலொன்றில் அதிகரித்து வரும் சவால்களுக்கு ஏற்பச் செயற்படுவதற்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களைத் தொடர்ச்சியாக இற்றைப்படுத்துதல்.

அதனடிப்படையில் 2019 ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால், இலங்கை நிர்வாகச் சேவை, இலங்கை கணக்காளர் சேவை மற்றும் இலங்கை தகவல் தொழிதொழில்நுட்பச் சேவை ஆகிய சேவைகளைச் சேர்ந்த 692 உத்தியோகத்தர்களுக்கு திறன் விருத்தி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதுடன் அது தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சேவை | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | இலங்கை நிர்வாக சேவை (தரம் I) | 1 | 16 |
| 2 | இலங்கை நிருவாக சேவை (தரம் III) | 3 | 119 |
| 3 | இலங்கை கணக்காளர் சேவை (தரம் I) | 6 | 269 |
| 4 | இலங்கை கணக்காளர் சேவை (தரம் III) | 7 | 273 |
| 5 | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் சேவை 1 ஆம் வகுப்பு தரம் I / II | 1 | 15 |
| | **மொத்தம்** | | **692** |

தரம் I உத்தியோகத்தர்களுக்கான திறன் விருத்தி நிகழ்ச்சிகளில் வெளிநாட்டு அனுபவங்களைப் பெறுவதற்காக சுற்றுலாவொன்றும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியின் குறிக்கோள் கற்றல் செயற்பாடுகளின் போது நடைமுறைக் கற்றலையும் அனுபவத்தையும் பெறுவதற்காக பங்குபற்றுநர்களுக்கு வெளிநாட்டு அனுபவங்களை வழங்குதல். பயிற்சிப் பாடத்திட்டம் மற்றும் முறைமை, பிரதானமாக அனுபவங்களையும் தகவல்களையும் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் சர்வதேச ரீதியான மிகச் சிறந்த நடைமுறைகளைக் கற்றல் இலக்குகளாகக் கொண்டு இலக்காகக் கொள்ளப்பட்ட குழுக்களுக்கு வலுவூட்டுவதற்கான அடிப்படையாகக் கொண்ட உபாய முறையாகவும் காணப்பட்டது.

அதனடிப்படையில் 2019 ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் தங்களது தொழில்சார் திறன் விருத்தி நிகழ்ச்சியைப் பூர்த்தி செய்திருந்த இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 35 உத்தியோகத்தர்களும் இலங்கை திட்டமிடல் சேவையின் 35 உத்தியோகத்தர்களும் மலேசியாவில் வெளிநாட்டு அனுபவத்தைப் பெறுவதற்காக சுற்றுலா அனுப்பப்பட்டார்கள்.

### 6.3 திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் கட்டிடக் கலைஞர் சேவையின் தரம் ஐ, II மற்றும் III

முகாமைதுத்துவ திறன் விருத்தி நிகழ்ச்சியை இலங்கை விஞ்ஞான சேவை, கட்டிடக் கலைஞர் சேவை மற்றும் தொழில்நுட்பச் சேவையின் (I, II மற்றும் III ஆந் தரம்) உத்தியோகத்தர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளதுடன், இந் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக சேவைகளுக்கு உரித்தான அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதும், மிகச் சிறந்த சேவையை வழங்கும் வகையில் சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்களின் நேர்மறையான மனப்பாங்கிளை வளர்ப்பதும் இதன் இலக்காகக் காணப்படுகின்றது.

இச் சேவைகளில் ஈடுபடும் ஊழியர் என்றவகையில் அவர்களுக்கு அவசியப்படும் முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகள் தொடர்பான பட்டறிவை அவர்களுக்கு வழங்குவதன் ஊடாக அவர்களின் தொழில் நிபுணத்துவம் மற்றும் தொழில் விருத்தியை மேம்படுத்த முடியுமாக உள்ளதுடன், அச் சந்தர்ப்பத்தை இந்நிகழ்ச்சிகள் வழங்குகின்றன. இந் நிகழ்ச்சிகளை 2019 மற்றும் 2020 ஆகிய இரு வருடங்களிலும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், அவற்றில் பங்குபற்றுவோரின் மொத்த எண்ணிக்கை 441 ஆகவும் காணப்படுகின்றது. 2019 ஆம் ஆண்டினுள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளகுழுவினர் இரண்டும் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

| இலக்கம் | குழுவினர் | உண்மையாக பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 1 | 1 ஆம் குழுவினர் | 34 | நடைபெற்று வருகின்றது |
| 2 | 2 ஆம் குழுவினர் | 29 | நடைபெற்று வருகின்றது |

### 6.4 டிப்ளோமா நிகழ்ச்சிகள்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவம் சனாதிபதி சுற்றாடல் விருது - 2019 இற்கான அரச நிறுவன வகுதியின் கீழ் "வெள்ளி விருது வெற்றியாளர்" ஆக தேர்ந்தெடுக்கப்பட்டது. இவ்விருது வழங்கும் நிகழ்வு 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29 ஆந் திகதியன்று அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையின் கீழ் நெலும் பொக்குண மண்டபத்தில் நடை பெற்றது. அந் நிகழ்வை மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ் விருதுகள் சனாதிபதி சுற்றாடல் விருதுகள் என்ற வகுதிகள் பலவற்றின் கீழ் வழங்கப்பட்டது. விருதுக்கான வெற்றியாளர்களை தேர்ந்தெடுப்பது கஷ்டமான செயற்பாடாக இருந்தாலும் நடுநிலையான நடுவர் குழுவின் பங்களிப்பு மெச்சத்தக்கது. "சனாதிபதி சுற்றாடல் விருது" சுற்றா-டல் தொடர்பான உணர்வுடன் செயற்படுவதற்கு சமூகத்தின் சகல பிரிவினரையும் ஊக்கப்படுத்தும் என்பதோடு அதன் ஊடாக மிகச் சிறந்த பசுமை மிக்க இலங்கையை உருவாக்குவதற்கும் வழியேற்படுகின்றது.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் வெற்றியீட்டிக் கொள்ளப்பட்ட வெள்ளி விருது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பசுமைக் குழாமுடன் ஒன்றிணைந்து இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பசுமை ரீதியான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பாரிய அளவில் பங்களிப்பு வழங்கும் பதிற் கடமையாற்றும் பணிப்பாளர் நாயகம், திருமதி. குமாரி ஜயசேகர, சிரேஷ்ட ஆலோசர் பதவி வகிக்கும் திருமதி. நெரஞ்சலா ஜயசுந்தர, பணிப்பாளர் (நிர்வாகம்) திரு. பிரசன்ன சந்தித் மற்றும் திரு. சுதன் அல்வீஸ் அவர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்டது.






### II. இலங்கை நிர்வாக சேவைக்கு புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களினால் எழுதப்பட்ட புத்தகங்களை வெளியிடும் நிகழ்வு பாராட்டுக்கு உட்படுத்தல்

2019 ஆம் ஆண்டில் அரசாங்க நிர்வாகச் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட புதிய உத்தியோத்தர்களுக்கிடையில் மூன்று உத்தியோகத்தர்கள் அவர்க-ளினால் எழுத்துருவாக்கம் செய்யப்பட்ட புத்தகங்ளை தமது சேவைத் துவக்க காலப்பகுதியினுள் வெளியிட்டமை தொடர்பில் அப்புதிய உத்தியோ-கத்தர்களின் எழுத்தாற்றலை பாராட்டும் வகையில் ஒரு விழாவொன்றினை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. அந்நிழ்ச்சியை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர நாயகம் திருமதி. கே.எம்.எஸ்.டி. ஜயசேகர அவர்கள், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணியாட்தொகுதியின் அங்கத்தவர்களக் மற்றும் இலங்கை நிர்வாக சே வையின் 2019 ஆம் ஆண்டு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட குழுவின் சகல உத்தியோகத்தர்களினதும் பங்குபற்றலுடன் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பிரதான கேட்போர்கூடத்தில் (சன்ஹித) நடைபெற்றது. அதில் விருத்தினர் சொற்பொழிவை நிகழ்த்த விருதுகள் பல கிடைக்கப்பெற்ற எழுத்தாளரான திருமதி சுமித்ரா ராஹுபந்த அவர்கள் வருகை தந்ததோடு புதிய உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட இவ்வுன்னத பணியை பாராட்டினார். இலங்கை நிர்வாக சேவையின் புதிய குழுவினருக்குரிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள புதிய உத்தியோகத்தர்களினால் தங்களாலே புதிதாக எழுதப்பட்ட புத்தகங்கள் தொடர்பில் முன்வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவை கூட்டத்தில் குழுமியிருந்தவர்களின் பாராட்டுக்களைப் பெறவும் காரணமாக இருந்தன.

I. திரு. நிமேஷ் திவங்க செனவிபால அவர்களால் எழுதப்பட்ட விஜய தரணி மற்றும் குருணாகலின் விபரங்கள் என்ற இரு புத்தகங்கள் தொடர்பில் முன்வைப்புக்கள் இடம்பெற்றதுடன், அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்ட அப்புத்தகங்கள் இரண்டுக்கு ம் மேலதிகமாக அவர் இலங்கை நிர்வாக சேவையில் இணைவதற்கு முன்னர் தலதா மாளிகாவையில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் போது மேலும் 29 புத்தங்களை எழுத்துருவில் கொண்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

II. திரு. துலஞ்சலன் அவர்கள் தமிழ் மொழியில் எழுதிய தமது அழகிலா அடல் என்ற புத்தகம் தொடர்பாகவும் முன்வைப்புக்கள் இடம்பெற்றன.

III. திருமதி. மந்துலீ மென்டிஸ் அவர்கள் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட தனது Me in My Saree என்ற புத்தகம் குறித்தும் முன்வைப்புக்கள் மேற்கெ-ாள்ளப்பட்டன.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் எதிர்காலச் சந்ததியினருக்கு மிகப் பெறுமதியான எழுத்தாக்கங்களை வழங்குவதற்கு இப்புதிய உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு முக்கியம் என பணிப்பாளர் நாயகம் அவர்கள் பாராட்டியதோடு, நாடு பூராகவும் பல்வேறு இடங்களில் கடமை-களைப் பொறுப்பேற்றதன் பின்னர் எதிர்காலங்களில் அவர்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ள வினயமான சேவைச் சூழலிலுக்கு மத்தியிலும் இவ்வாறான பணிகளை முன்னெடுத்து வருமாறும் அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. மேலும், அவர்களினால் தங்களது புத்தகங்களை வெளியீடு செய்வதற்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திடம் எவ்வித உதவியையும் அவர்கள் வேண்டி நிற்க வில்லை என்பதனையும் அவர் குறிப்பிட்டார். அத்தோடு அவர்களின் தைரியம் மற்றும் அர்ப்பணம் போற்றப்பட வேண்டிய ஒரு விடயம் என்பதோடு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணியாட்தொகுத-ியினர் அனைவருக்கு பதிலாக தான் அவர்களுக்கு பாராட்டு தெரிவிப்பதாகவும் கூறி நின்றார்.
புதிய எழுத்தாளர்களினால் தங்களது புத்தகங்கள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் வாசிகசாலைக்கு புத்தகங்களும் வழங்கப்பட்டன.







## III. பணியாட்தொகுதியினரின் இறுதி பகுப்பாய்வு ரீதியான கலந்துரையாடலுடன் ஓய்வுச் சந்திப்பு (Retreat) 2019

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் ஓய்வுச் சந்திப்பு - SLIDA Retreat இனை அங்கு பதிற் கடமையாற்றும் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையின் கீழ் அதன் சகல கல்விசார் மற்றும் முகாமைத்துவ பணியாட்தொகுதியினரின் பங்குபற்றலுடன் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18, 19 மற்றும் 20 ஆந் திகதிகளில் குகுலே ஆறு Laya Leasure வில் நடைபெற்றது.

இவ்வாறான ஓய்வுச் சந்திப்பொன்று, எந்தவொரு நிறுவனத்தினதும் பணியாட்தொகுதினரின் தனது நிறுவனத்தின் அன்றாட நடவடிக்கைகளுக்குப் புறம்பாக அந்நிறுவனத்தின் எதிர்காலம் மற்றும் கலந்துரையாடப்பட வேண்டிய விசேட பிரச்சினைகள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டு பரந்த அளவில் கலந்துரையாடலும் விவாதங்களை நடாத்துவதற்கும், பொறிமுறை ரீதியாக சிந்திப்பதற்கும் அதனூடாக முடிவுகளை எடுப்பதற்குமான, இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது. அத்துடன் ஊழியர்களுக்கு தங்களது பொறுப்பான கடமைகளில் இருந்து விடுபட்டு சிறியதொரு ஓய்வினை எடுப்பதற்கும் சந்தர்ப்பமாக அமைந்துள்ளதோடு, சேவைகளை வழங்கும் போது அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் பிணக்குகளை கலந்துரையாடுவதற்கும் அவற்றுக்கு உரிய தீர்வுகளை கண்டுபிடிப்பதற்கும் இக்கலந்துரையாடல் உதவியாக அமைகின்றது. இது அவர்களிடத்தில் குழு ரீதியான உணர்வுகளை மேம்படுத்துவதோடு அவர்களனைவரும் ஒரே செயற்பாட்டினைச் சுற்றி ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் எதிர்வரும் வருடங்களின் இலக்குகளை தீர்மானிப்பதற்கும் இதுவொரு சிறந்த சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தியது.





## IV. கடந்து வந்த நமது பயணம்

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவத்தின் வரலாறு தொடர்பாக தயாரிக்கப்பட்ட "கடந்து வந்த நமது பயணம்" என்ற புத்தகத்தை சிரேஷ்ட கல்விசார் ஆலோசகர், திருமதி சீதா விதானாரச்சி அவர்களினால் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பதிற் கடமையாற்றம் பணிப்பாளர் நாயகம், திருமதி குமாரி ஜயசேகர அவர்களிடம் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவக வளாகத்தில் வைத்து 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதியன்று கையளிக்கப்பட்டது.



## V. இலங்கை பொலீஸின் பிரதிப் பொலீஸ் மா அதிபர்களுக்கான முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி

பிரதிப் பொலீஸ் மா அதிபர்களுக்கான முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக ஐந்து நாட்களைக் கொண்ட பயிற்சித் திட்டம் 2019 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29 ஆந் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 02 ஆந் திகதி வரை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் நடைபெற்றது. ஊக்குவிப்பு, கண்காணிப்பு, தலைமைத்துவம், தொடர்பாடல், வாடிக்கையாளர் சேவை என்பன இப் பாடநெறியின் உள்ளடக்கத்தினுள் சேர்க்கப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சித்திட்டத்தினுள் முகாமைத்துவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சிறந்த நடைமுறைகள் மற்றும் அதற்குரித்தான சித்தாந்தங்களைத் தயாரிப்பதற்கும் அறிந்து கொள்வதற்கும் அவர்களிடம் திறன்களை ஏற்படுத்தி நடைமுறைசார்ந்த அனுபவங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந் நிகழ்ச்சித்திட்டத்தை திருமதி. கே. எம். எஸ். டீ.ஜயசேகர அவர்கள் ஏற்பாடு செய்தார்கள் என்பதோடு சிரேஷ்ட ஆலோசகர் குழுவின் ஒத்துழைப்பும் அவருக்கு கிடைக்கப்பெற்றது.



### VI. இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சி

இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான முகாமைத்துவ மற்றும் தலைமைத்துவம் தொடர்பாக 10 நாட்களை க் கொண்ட தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சித் திட்டம் 2019 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் 9 ஆந் திகதி வரை நடாத்தப்பட்டது. பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தினை முழுமைப்படுத்தியதன் பின்னர் உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்ப் பத்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டது.



### VII. "பிரயோக நடைமுறையினுள் தலைமைத்துவம்" என்ற தலைப்பில் பகிரங்க சொற்பொழிவு

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பட்டப்பின் பட்ட கற்கைப் பாடசாலையின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததும் “பிரயோக நடைமுறையினுள் தலைமைத்துவம்” என்ற தலைப்பில் பகிரங்க சொற்பொழிவு ஓய்வு பெற்ற ஜெனரல் தயா ரத்நாயக அவர்களினால் 2019 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 11 ஆந் திகதி முற்பகல் 08.30 மணி முதல் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் “சன்கதனி” மண்டபத்தினுள் நடாத்தப்பட்டது. இலங்கை இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற ஜெனரால் தயா ரத்நாயக அவர்கள் ஜெனரால் பதவிக்கு தரமுயர்த்தப்படுவதற்கு முன்னர் இராணுவத்தின் பல உயர் பதவிகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இராணுவத்தினுள் தனது சேவைக் காலத்தினுள், ஜெனரால் ரத்நாயக அவர்கள் வெளிநாட்டு கல்விச் சுற்றுலாக்கள் பலவற்றினை மேற்கொண்டுள்ளார் என்பதோடு சர்வதேச மாநாடுள் மற்றும் கலந்துரையாடல்களில் கலந்தும் கொண்டுள்ளார். இச் சுற்றுலாக்கள் மற்றும் இலங்கையினுள் தான் பெற்றுக் கொண்ட அனுபவங்களின் மூலம் உதாரணங்கள் பலவற்றினை எடுத்துக் காட்டி தலைமைத்துவத்தின் பண்புகள் மற்றும் பாங்குகள் மற்றும் தலைவர் ஒருவரினால் அவ்வந்த சந்தர்ப்ப அடிப்படையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பன பற்றி அவர் தெளிவுபடுத்தினார்.



### VIII. இலங்கை நிர்வாக சேவைக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான சமூக ஒருங்கிணைப்பு தொடர்பில் அமைந்த பாடநெறிகள்

இலங்கை நிர்வாக சேவைக்கு 2019 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் குழுவுக்கு சேவைத் துவக்கப் பயிற்சி வழங்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப உதவியுடன் சமூக ஒருங்கிணைப்பு தொடர்பான இணையவழிப் பாடநெறி யொன்றினை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் நடாத்தப்பட்டது. இது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு விடயமாக காணப்படுவதுடன், பொது மக்களுக்கு சேவை வழங்கலின் போது பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களை எவ்வாறு முகாமைத்துவம் செய்வது என்பதற்காக கீழே தரப்பட்டுள்ள பிரிவுகளுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டு அவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

சமூக ஒருங்கிணைப்பு என்பதன் வரைவிலக்கணம் - சமூகத்தை ஓர் அலகாக ஒரே முறையில் பேணிச் செல்லும் “கிராமம்” என்பதாகும். அது குடும்பம், நிறுவனம், சமூகம், நாடு, மதம் மற்றும் உலகத்தை சமூகம் என அறிமுகப்படுத்தப்படுகின்றது. மேலும் சமூக ஒருங்கிணைப்பு என்பதனுள் உள்ளடக்கப்படுபவைகள் சமத்துவம், பங்குபற்றல், ஒன்றினுள் உட்புகுதல், ஒருங்கிணைப்பு , சகலரினதும் நலன்கள் மற்றும் அவையாவும் உள்ளடங்கும் வகையில் இனங்காணப்பட்டுள்ளது.

இப் பாடநெறிக்காக இணையவழி மொடியுல்கள் 3 காணப்பட்டதோடு, அதில் கலந்து கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு 1 ஆம் மொடியுலின் மூலம் குறித்த எண்ணக்கரு, அதன் கூறுகள் மற்றும் தொடர்புகள் பற்றியும் 2 ஆம் மொடியுலின் மூலம் ஆளடையாளம் என்றால் என்ன என்பது பற்றியும் ஆளடையாளத்தை உருவாக்குவது எவ்வாறு என்பது பற்றியும், பிரச்சினை என்றால் என்ன ? மற்றும் பிணக்குகள் தொடர்பான உணர்ச்சிகள் எவ்வாறுள்ளது என்பது பற்றியும் 3 ஆம் மொடியுலின் ஊடாக சமூக ஒருங்கிணைப்பை அளவிடும் முறை,பிரயோக மட்டத்தில் சமூக ஒருங்கிணைப்பு பயன்படுத்தப்படும் விதம் பற்றியும், சமூக ஒருங்கிணைப்பு தொடர்பாக உதாரணங்களைக் கண்டறிவது விதம் குறித்தும் முழுமையான அறிவினைப் பெற்றுக் கொள்ள முடியுமாக உள்ளது.

மேற்குறிப்பிட்ட சகல விபரங்கள் தொடர்பாகவும் அறிவு ரீதியாக வழங்குவதற்கு மேலதிகமாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் பாடநெறியின் மதிப்பீட்டு அமர்வொன்று மற்றும் நிறைவு செய்வதற்கான செயலமர்வு 2019 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 7 ஆந் திகதியன்று வோட்டர்ஸ் எஜ் வில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டம் ஒரு நாள் பூராகவும் நடைபெற்றதோடு அதில் 173 உத்தியோகத்தர்கள் அப்பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டார்கள். அம்மதிப்பீட்டின் போது மொடியுலை தொடர்ச்சியாக கற்பிப்பதற்கு பயிற்சி பெறும் வெளிவாரி மற்றும் உள்ளக வசதி வாய்ப்புக்களை வழங்குபவர்களால் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஆலோசகர்களுடன் ஒன்றிணைந்து புதிய உத்தியோகத்தர்களின் செயற்திறன் மதிப்பீட்டாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.



## IX. அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் பட்டம் வழங்கும் விழா 2018

2019 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 04 ஆந் திகதியன்று பண்டாரநாயக சர்வதேச ஞாபகர்த்த மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பட்டப் பின் பட்டம் வழங்கும் கல்விசார் பாடசாலையின் 06 ஆம் அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்டம் வழங்கும் நிகழ்வின் பிரதான விருந்தினராக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கௌரவ பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க அவர்கள் கலந்து கொண்டார்கள். இதன் போது 144 பட்டதாரிகளுக்கு அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின் பட்டம் மற்றும் அரச முகாமைதுத்துவம் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமாவுக்கான சான்றிதழையும் பெற்றுக் கொண்டார்கள். விசேட விருந்தினராக அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ கௌரவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார அவர்களும் இச்சந்தர்த்தில் கலந்து கொண்டார்கள். அத்தோடு ஆளுநர் சபையின் தலைவர் மற்றும் அரசாங்க நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் ஜே. ஜே. ரத்னசிரி அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.






## X. " அறிவு, எல்லையைக் கடந்து... Knowledge Beyond Boundaries..."

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04 ஆந் திகதி இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தில் இலங்கை அரசின் ஈ –கற்கைத் தொ-குதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக சகல அரச உத்தியோகத்தர்களினதும் இயலளவு விருத்தி மற்றும் தொடர்ச்சியான கற்கை தேவைப்பாடு பூர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.






## XI. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் முதற் தடவையாக உற்பத்தித்திறன் விருதை வெற்றியீட்டிக் கொண்டது

2019.03.26 ஆந் திகதியன்று பண்டாரநாயக ஞாபகர்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் நிகழ்வில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனம் உற்பத்தி மற்றும் சேவைகள் வகுதியின் அடிப்படையில் மூன்றாம் இடத்தை வெற்றியீட்டிக் கொண்டது.





## XII. இந் நாட்டில் முதற் தடவையாக அரச துறையில் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான நிர்வாக சட்டதிட்டம் தொடர்பாக புதியதொரு டிப்ளோமா பாடநெறியை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டது.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் 2019.10.29 ஆந் திகதியன்று அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு. ஜே. ஜே. ரத்னசிரி அவர்களின் ஒத்துழைப்புடன் அரச மற்றும் தனியார் துறை உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியான சட்ட திட்டங்கள் தொடர்பிலான டிப்ளோமா பாடநெறி 2019/2020 ஆம் ஆண்டுகளில் ஆரம்பித்து வைக்கும் அங்குரார்பண நிகழ்வு இடம்பெற்றது. இச்சந்தர்ப்பத்திற்கு வருகை தந்த கௌரவ விருந்தினர்களில் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் ஆளுகை சபையின் அங்கத்தவர் காமிணி செனவிரத்ன அவர்கள் மற்றும் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் திரு. டப்ளியூ. எச். கருணாரத்ன அவர்களும் கலந்து கொண்டார்கள்.

அவ்விழாவில் அனைவரையும் விழித்து உரையாற்றிய செயலாளர் ஜே. ஜே. ரத்னசிரி அவர்கள், அரச உத்தியோகத்தர் ஒருவர் அன்றாட உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றும் போது அனுபவத்தில் கொள்ளப்படும் விடயங்களை நிஜ வாழ்க்கையில் உதாரணமாக எடுத்துக் காட்டி சட்டரீதியான அறிவு மற்றும் திறன்ளை ஏற்புடையதாக்கிக் கொள்ளக்கூடிய திறன் மற்றும் அதன் தேவைப்பாடு குறித்து எடுத்துக் காட்டினார். அவ்வாறே சட்டரீதியான பின்னணி தொடர்பான தெளிவான அறிவு இருத்தல் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகள் பொருட் கோடல் செய்வதற்காக உதவியாக இருக்கும் எனவும் அவர் தெளிவுபடுத்தியிருந்தார்.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் வழங்கப்பட்ட ஆறு மாத கால டிப்ளோமா பாடநெறியாகக் காணப்படும் இது சட்டம் மற்றும் கொள்கைகளை செயற்பாட்டில் கொண்டு வருவது தொடர்பில் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்வதற்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கப்படுவதாகவும் சட்ட விடயத்தில் மற்றும் கொள்கையை நடைமுறைக்கு கொண்டு வரும் நிபுணத்துவம் அரச துறை நிறைவேற்று உத்தியோகத்தராக நடவடிக்கை எடுப்பதற்கும் அவசியப்படும் அறிவு மற்றும் விசேடமான திறன்களினால் அதனை கற்கின்றவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

டிப்ளோமா பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் சட்டம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்பட்டது. இப் பாடநெறி சர்.ஐயபு ஆலோசகர், சட்டத்தரணி திருமதி. ரோஷிணீ திஸாநாயக அவர்களால் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டது.





## XIII. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் மற்றும் கனடாவின் செனகோ பிரயோகக் கலை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் ஒத்துழைப்பு

கடந்த ஆண்டு மே மாதத்தில் தெற்காசியாவின் Seneca International இல் பணிப்பாளர் பிரஷாந்த் சிரீவஸ்டாவா அவர்கள் Seneca மற்றும் இலங்கைக்கு இடையில் கல்விசார் கூட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்துடன் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இம் முதற் கட்டத்தின் பெறுபேறாக 2019 சனவரி மாதம் 14 ஆந் திகதியன்று Seneca குழு இலங்கைக்கு வருகை தந்தார்கள்.

கனடாவின் அரச பிரிவின் முன்னணி பட்டப்பின் இரண்டாம் நிலை கல்வி நிலையமான செனெகா பிரயோக கலை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரித் தலைவர் David Agnew அவர்கள் மற்றும் Seneca கல்லூரியின் தலைவரின் அலுவலகத்தின் பணியாட்தொகுதியினருக்கான பிரதானியான செல்வி Renata D'Innocenzo மற்றும் தெற்காசியாவின் Seneca International இன் பணிப்பாளர் திரு. பிரஷாந்த் சிரீவஸ்டாவா உள்ளடங்கலான குழு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்துக்கு வருகை தந்தார்கள்.




## XIV. பாகிஸ்தானில் பயிற்சி நிகழ்ச்சி

இலங்கையின் உயர் இஸ்தானகர் அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் பாகிஸ்தான் பிரதமரின் உயர் கல்வி ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வடிவமைக்கப்பட்ட இந் நிகழ்ச்சித்திட்டம் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆந் திகதி முதல் 27 ஆந் திகதி வரை லாஹர் நகரத்தில் அரச கொள்கைகள் தொடர்பான தேசிய பாடசாலைகளின் நிறைவேற்று அபிவிருத்தி நிறுவனத்தில் நடைபெற்றது. இலங்கையின் சிவில் ஊழியர்களுக்கு மிகவும் முக்கியமான விடயப் பரப்புடன் கூடிய துறைகள் பலவற்றினை இந் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் போது ஏற்படும் முக்கிய சந்திப்பாக இஸ்லாமாபாத்தில் அமைந்துள்ள சனாதிபதி அலுவலகத்தில் பாகிஸ்தானின் அதிமேதகு சனாதிபதியையும் அங்கு சந்திக்கக் கிடைத்தது. அதன்போது அவர் தற்போதைய சிவில் ஊழியர்களின் பணிகள் மற்றும் ஒரு நாட்டின் அபிவிருத்திற்கு அதில் உள்ளங்கியுள்ள தாக்கங்கள் பற்றி தெளிவுபடுத்தினார்.





## XV. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணியாட்தொகுதியினருக்காக ஊவா குடாஓய கொமாண்டோ ரெஜிமேந்து பயிற்சிப் பாடசாலையில் நடைபெற்ற வெளிப் பயிற்சி

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணியாட்தொகுதியனருக்கான தலைமைத்துவம் மற்றும் குழுக்களை கட்டியெழுப்பல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி ஒன்றினை 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆந் திகதி முதல் 17 ஆந் திகதி வரை ஊவா குடாஓய கொமாண்டோ பயிற்சிப் பாடசாலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந் நிகழ்ச்சிக்காக GIZ இன் மூலம் நிதி வழங்கல் இடம்பெற்றதுடன் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணியாட்தொகுதியினரில் பல்வேறு மட்டத்துடையவர்கள் பங்குபற்றிய 70 உத்தியோகத்தர்களுக்கான முழுநேர வெளியே அமைந்த பயிற்சி நிகழ்ச்சிக்காக சகல நடவடிகைகளும் வடிவமைப்பதற்கு கட்டளைத் தளபதி கார்னல் கே.எச்.எம். எஸ். விக்ரமரத்ன மற்றும் சர் IaG ஒருங்கிணைப்பாளர் மேஜர் சமிந்த சமரசிங்க அவர்களினால் மேற்கொள்ளப்பட்டது. அப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் தலைமைத்துவப் பண்புகள் மற்றும் முடிவுகள் எடுப்பதற்கான திறன்கள், உடலியல் தகைமைகள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் உணவு உட்கொள்ளும் பழக்கவழக்க ஒழுங்குமுறை என்பனவற்றை மேம்படுத்தும் விதம் பற்றிய விடயங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. மேற்கூறப்பட்ட நோக்கங்களை இலக்காகக் கொண்டு சகல பணியாட்தொகுதி அங்கத்தவர்களுக்கும் பல்வேறு மட்டங்களில் குழு ரீதியான செயற்பாடுகளில் கலந்து கொள்வதற்குமான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.



## 13. கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

PED 55 ஆம் இலக்க பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1. ஆம் பந்தியின் பிரகாரம், தற்காலத்தில் மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கிய கணக்காய்வுக் குழு நிறுவனத்தின் நிதி கூற்று, நிதி அறிக்கையிடல் செயற்பாடு, உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் ஆபத்து முகாமைத்துவ அமைப்பு, உள்ளக செயற்பாடுகள் மற்றும் வெளிவாரி கணக்காய்வின் கணக்காய்வுப் பிணக்குகளுக்கு பதிலளித்தல், உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வுத் தேடல்கள் மற்றும் சிபாரிசுகள், சுயாதீனத்தன்மை மற்றம் செயலாற்றுகையைப் போன்றே விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் பொதுச் செயற்பாட்டுக் கொள்கைகள் மற்றும் இணக்கப்பாடு கணக்கெடுப்பு செய்தல் தாபன நடவடிக்கைகள் என்பவற்றில் நேர்மையை சான்றுப்படுத்துவதற்காக நிறுவன நடவடிக்கைகளில் கண்காணித்தல் ஆளுநர் சபைக்கு உதவியாக இருத்தல்.

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

### குழுமம் மற்றும் கூட்டங்கள்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் ஆளுநர் சபை அங்கத்தவர்கள் மூன்று (03) பேரும், மற்றும் சுயாதீன மேற்பார்வையாளர் ஒருவரையும் கொண்டுள்ளனர்.

2019 ஆம் ஆண்டுக்காக ஆளுநர் சபையினால் பின்வருவோர் கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டனர்:

- திரு. பீ.பி.எஸ்.சீ. நோனிஸ் — பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்.
- திரு. கமல் பத்மசிரி — செயலாளர், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு. (நியமனக் காலப் பகுதி - 2016 ஒக்டோபர் மாதம் முதல் 2019 மார்ச் மாதம் வரை)
- திரு. எம்.எம்.பி. கே. மாயாதுன்ன — செயலாளர், நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு.
- திரு. காமிணி கே.பீ. ரத்நாயக — ஆளுநர் சபை அங்கத்தவர், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்

2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான குழுவின் செயலாளராக உள்ளகக் கணக்காய்வாளர் பணியாற்றினார். அந்த வருடத்தில் 2 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் கணக்காய்வுக் குழுக் கூட்ட அறிக்கைகள் சபைக்கு தொடர்ச்சியான முறையில் அனுப்பப்பட்டது. அரசாங்கத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக 03 ஆவது மற்றும் 04 ஆவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை என்பதுடன் நிறுவனத்திற்கான சபை அங்கத்தவர்கள் முன்மொழியப்படவில்லை. கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தின் பிரதிநிதியொருவரான கணக்காய்வு அத்தியட்சகர் எம்.ஆர்.ஆர்.கே. மல்லவ அவர்கள் இதில் அவதானிப்பாளராகப் பங்கேற்றார். அது தவிர, பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் அவதானிப்பாளராகப் பங்கேற்றார். விசேட விடயங்களில் கணக்காய்வுக் குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகத்திற்கும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

### உசாவுகை விடயம்

PED 55 ஆம் இலக்க பொதுத் தொழில்முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க ஆளுநர் சபை அங்கத்தவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள குறிப்பான உசாவுகை விடயங்களின் மூலம் குழு நிர்வகிக்கப்படுகின்றது. உசாவுகை விடயங்களுக்கும் அரசாங்கத்தின் தேவைகளுக்கும் இணங்க தமது புதிய பொறுப்புக்களை நிறைவேற்றும் போது பின்வரும் குறிக்கோள்கள் தொடர்பில் குழு கவனம் செலுத்தும்.

அ. உள்ளகக் கணக்காய்வு அலகின் பொறுப்புக்களைத் தீர்மானித்தலும் வருடாந்த கணக்காய்வுத் திட்டங்களை மீளாய்வு செய்தலும்.

ஆ. நிறுவனத்தின் அனைத்துச் செயற்பாடுகளுக்குமான உள்ளக நிர்வாகத் தொகுதிகளை மீளாய்வு செய்தலும் மதிப்பீடு செய்தலும்.

இ. செலவுப் பயனுறுதிக்காகவும் வீண் விரயங்களைக் குறைப்பதற்காகவும் குறிப்பான கால இடைவெளிகளுக்குள் செயலாற்றுகையை மீளாய்வு செய்தல்.

ஈ. வெளிவாரியான கணக்காய்வாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்துதலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின்/ வெளிவாரியான கணக்காய்வாளர்களின் முகாமைத்துவக் கடிதங்கள் தொடர்பில் தொடர் நடவடிக்கை எடுத்தலும்.

உ. அரசியலமைப்பு, ஒழுங்குவிதிகள், சட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு ஒத்திசைவாகச் செயற்படுவதை உறுதி செய்தல்.

ஊ. கணக்கீட்டுத் தரநியமங்களுடன் இணக்கமாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக நிதிக் கூற்றுக்களை மீளாய்வு செய்தல்.

எ. உள்ளகக் கணக்காய்வு / வெளிவாரியான கணக்காய்வு அறிக்கைகளையும் முகாமைத்துவக் கடிதங்களையும் மீளாய்வு செய்து பதில் நடவடிக்கைகள் எடுத்தல்.

ஏ. பொதுத் தொழில்முயற்சிகள் குழுவின் சிபாரிசுகளை / கட்டளைகளை நடைமுறைப்படுத்துதல் மீளாய்வு செய்தல்

ஐ. குழுவினால் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியது, நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அல்லது மேம்படுத்தப்பட வேண்டியது என்று கருதும் எந்தவொரு விடயத்தையும் ஆளுநர் சபைக்கு அறிவித்தல்.

ஒ. ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்காக குழுவினால் கண்டுபிடிக்கப்பட்டவை தொடர்பில் அறிக்கை தயாரித்தல்.

## நிதி அறிக்கைப்படுத்தல்

தரப்பினர்களுக்கு வழங்கப்படும் தகவல்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக நிதி அறிக்கைப்படுத்தல் முறைமையின் பயனுறுதித் தன்மை குழுவினால் மீளாய்வு செய்யப்படும். கணக்கு ஏடுகளிலும் இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு இணங்க உள்ளபடியானதும் நீதியானதுமான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான ஆளுநர் சபையின் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக குழு ஆளுநர் சபைக்கு உதவும். அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் சரியாகவும் முழுமையாகவும் கணக்கு ஏடுகளில் பதியப்படுவதுடன் நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதற்காக உள்ளக நிர்வாகத் முறைமையினதும் செயலொழுங்கு விதிகளினதும் போதியதன்மையும் பயனுறுதித் தன்மையும் குழுவினால் மீளாய்வு செய்யப்படுகின்றன.

குழுவினால் அனைத்து காலாண்டுக்குமான கணக்காய்வு செய்யப்படாத இடைக்கால நிதிக் கூற்றுகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும் போது செய்யப்பட்ட முக்கியமான எடுகோள்களும் தீர்மானங்களும் அடங்கிய உதவித் தகவல்கள் மீளாய்வு செய்யப்பட்டன.

## உள்ளக நிர்வாகம்

கணக்காய்வுக் குழுவினால் 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி அறிக்கைப்படுத்தலின் போது உள்ளக நிர்வாகத்திலுள்ள பயனுறுதித் தன்மை மதிப்பிட்டபட்டது. இந்தச் செயற்பாடுகள் மூலம் உள்ளக நிர்வாகச் செயற்பாடுகள் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் ஒத்திசைவாக அமைந்துள்ளதை உறுதிப்படுத்துவதில் காணப்படும் அபாயச் சாத்தியங்களை நிர்வகிக்கும் செயற்பாடுகளின் போதியதன்மை மற்றும் பயனுறுதித் தன்மை மதிப்பிடப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வாளர்களால் வழங்கப்படும் சிபாரிசுகளின் அடிப்படையில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உள்ளக நிர்வாக முறைமையின் பயனுறுதித் தன்மையை மேம்படுத்துவதற்காக முகாமைத்துவத்தினால் பொறுத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை இக்குழு உறுதிப்படுத்தும். உள்ளகக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டு ஆளுநர் சபை தனது செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் உதவுகின்றது.

## உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு செய்யப்படும் செயற்பாடுகளின் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் சுயாதீனமாக மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும் பக்கச் சார்பின்றியும் உரிய தொழில்சார் முறையிலும் அது மேற்கொள்ளப்படுவதையும் கணக்காய்வுக் குழு சான்றுப்படுத்தும். இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயற்பாடுகளின் விடயப்பரப்பு, வளங்கள், பரப்பெல்லை மற்றும் பயனுறுதித் தன்மை என்பன கணக்காய்வுக் குழுவினால் மேற்பார்வை செய்யப்பட்டு மீளாய்வு செய்யப்பட்டது.

**பீ.பி.எஸ்.சீ. நோனிஸ்**
**தலைவர்**
**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

## பணிப்பாளர் நாயகம்
## இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதியாண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய நிதி மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் அடிப்படையிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 தகுதிவாய்ந்த கருத்து

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த வருடத்தின் நிதிச் செயலாற்றுகை, தேறிய சொத்து மாற்றக் கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், சுருக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளைக் கொண்ட 2019 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசிலயமைப்பின் 15 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்திற்கு இணங்க எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை என்ற பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் மூலமான தாக்கங்களைத் தவிர இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அன்றைய தினத்தில் முடிவடைந்த வருடத்திற்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை அரச துறை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றன என்பதே எனது கருத்தாகும்.

### 1.2 தகுதிவாய்ந்த கருத்துக்கான அடிப்படை

(அ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இற்கு இணங்க சேர வேண்டிய செலவுகள் 05 இன் பெறுமதியான ரூபா 2,519,794 மற்றும் கிடைக்க வேண்டிய வருமான விடயங்கள் 03 இன் பெறுமதியான 406,790 ரூபா நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை அரச துறைக் கணக்கீட்டுத் தரநியமம் 02 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க 32,383,494 ரூபா வட்டி வருமானம் மற்றும் ரூபா 25,802 நிதிச் செலவு முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன் நடைபெற்று வரும் வேலைகளுக்காகச் செலுத்தப்பட்ட 1,644,344 ரூபா முதலீட்டுச் செயற்பாடாகக் காட்டப்படாமல் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. அத்துடன் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின கீழ் காட்டப்பட வேண்டிய ரூபா 1,150,386 பெறுமதியான பணிக்கொடைக் கொடுப்பனவு முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(இ) நிறுவனத்தின நிலையான சொத்துக்களுக்கான இலங்க அரச கணக்கீட்டு தரநியமம் 07 இன் 65 ஆம் பிரிவிற்கு இணங்க ஆகக் குறைந்தது வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையினால் முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது பயன்படுத்தும் செலவு 196 மில்லியன் ரூபாவாகும். எவ்வாறாயினும் அந்தச் சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் இலங்கை அரச துறை கணக்கீடு தர நியமம் 03 இற்கு இணங்க மீண்டும் மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் இது தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ஏனைய நுகரப்பட்ட பொருட்களின் பெறுமதியில் ஷரூபா. 216,197 வரவு மீதியில் கழிக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தமையினால் வழங்கல் பொருட்கள் அந்தப் பெறுமதியைவிட குறைவாகக் காட்டப்பட்டிருந்ததுடன் தனியார் நிறுவனங்கள் இரண்டுக்குச் செலுத்த வேண்டியிருந்த 545,645 ரூபா கிடைக்க வேண்டிய மீதியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) நிதிக் கூற்றுக்களையும் பெறுமானத் தேய்வைக் கணிக்கும் அட்டவணையையும் ஒப்பிடுகையில் நிலையான சொத்துக்களில் 07 விடயங்களில 15,537,607 ரூபா வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

இலங்கை கணக்காய்வுத் தரநியமங்ளுக்கு இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது., இந்தக் கணக்காய்வுத் தரநியங்களுக்கு ஏற்ப எனது பொறுப்பு, இந்த அறிக்கையிலுள்ள நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் விரிவாக விளக்ககப்பட்டுள்ளன. எனது தகுதிவாய்ந்த கருத்திற்காக அடிப்படையொன்றை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்ட கணக்காய்வுச் சாட்சிகள் எனது நம்பிக்கையின் படி போதுமானவையாகவும் பொருத்தமானவையாகவும் உள்ளன.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தினதும் நிர்வாக் செய்யும் தரப்பினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமான முறையில் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் பிழைகளின் காரணமாக ஏற்படக் கூடிய பிழையான கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்ககளை தயாரிப்பதற்கு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவனத்தை தொடர்ச்சியாகக் கொண்டு நடாத்தும் சாத்தியத்தை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் முகாமைத்துவம் நிறுவனத்தை தீர்த்துக் கட்டுவதற்கு தீர்மானிக்குமாயின் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் போது தவிர தொடர்ச்சியான இருப்பின் அடிப்படையில் கணக்குப் பதிவுகளை மேற்கொள்ளுதலும் நிறுவனத்தின தொடர்ச்சியான இருப்புக்கான விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவத்தின பொறுப்பாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயற்பாடுகள் தொடர்பான பொறுப்புக்கள் நிர்வகிக்கும் தரப்பினருடையதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின 16 (1) உப பிரிவிற்கு இணங்க நிறுவனத்தின் வருடாந்த மற்றும பருவ கால நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய விதத்தில் வருமானம் செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரிய முறையில் ஏடுகளையும் அறிக்கைகளையும் பேணி வருதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வதில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நோக்குகையில் நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் எண்ணளவில் பொய்யான கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதியினை வழங்குதலும் எனது அபிப்ராயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான அத்தாட்சிப்படுத்தல் உயர் தரத்துடைய அத்தாட்சியாக அமைகின்றது என்றாலும், இலங்கை அரச துறைக் கணக்கீட்டுத் தரநியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அதனை எப்போதும் எண்ணளவில் குறைத்து மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதனை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படுவதில்லை. மோசடி மற்றும் தவறுகள் தனியாக அல்லது கூட்டாக அல்லது அழுத்தங்கள் காரணமாக அளவு ரீதியில் குறைத்து மதிப்பீடுகள் செய்யப்பட முடியும் என்பதோடு, இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரீட்சிப்பாளர்களினால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் தாக்கம் செலுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழிற்துறைத் தீர்ப்பு மற்றும் தொழிற்துறை கட்டமைப்புடன் இலங்கை கணக்காய்வு தர நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. I also:

- மோசடி அல்லது தவறின் காரணத்தினாலான நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்கண்டு அவற்றை மதிப்பிட்டு, அத்தகைய ஆபத்துக்களுக்கு துலங்கல் காண்பிக்கும் விதத்தில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதனால் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும், எனது கருத்துரைக்கு போதியளவிலானதும் பொருத்தமானதானதும் கணக்காய்வு சான்றினை பெற்றுக் கொள்வது எனது கருத்துக்களுக்கு அடிப்படையாக அமையும். போதியளவு பிறழ் கூற்றுக்களினால் ஏற்பாடும் தாக்கங்களை விட மோசடியினால் ஏற்படும் தாக்கங்கள் பாரியதாக அமைவதோடு, கூட்டு நடவடிக்கை,போலியான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்ந்திருத்தல் என்பன மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றன.
- கால அவகாசங்களுக்கு ஏற்ப உசிதமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவினைப் பெற்றிருந்தாலும் , உள்ளக கட்டுப்பாட்டின் பயனுறுதித் தன்மை தொடர்பான கருத்துரையினைத் தெரிவிப்பதற்கு நாடுவதில்லை.
- பிரயோகத்தில் உள்ள கணக்கியல் கோட்பாடுகள் மற்றும் கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் தொடர்புடையதான வெளிப்படுத்தல்களின் தகுதிகள் பாராட்டத்தக்கது.
- நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள் காரணமாக நிறுவனத்தின் இருப்பு தொடர்பில் போதியளவு நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பது பற்றி பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படை இங்கு தீர்மானிக்கப்படுகின்றது. போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் முடிவு செய்தல் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெ ளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதோடு, அவ்வெளிப்படுத்தல்கள் போதியதற்றதாக இருப்பின் எனது கருத்தை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகளின் மீது தொடர்ச்சியான இருப்பு நிறைவடைவதற்கும் முடியும்.
- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களை முன்வைத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உட்பட்டுள்ளதோடு, அதற்கு அடிப்படையாக அ மைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருப்பதனை பாராட்டுகின்றது.

எனது கணக்காய்வினுள் அடையாளங் காணப்பட்ட முக்கிய கணக்காய்வுத் தேடல்கள், முக்கிய உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பிந்திய விபரங்களைச் தரப்பினர்களுக்கு தெ ளிவுபடுத்தப்படும்.

### 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கும்.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின 12 (அ)ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க, எனது தகுதிவாய்ந்த அறிக்கையில் .அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்துத் தவல்களும் விளக்கங்களும் என்னால் பெறப்பட்டதுடன், உரிய நிதி அறிக்கைகள் நிறுவனத்தினால் பேணப்பட்டு வந்துள்ளமை எனது சோதனையின் போது தெரிய வந்தது.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் ஆம் பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க நிறுவனத்தின் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்திற்கு இணங்கியவையாக உள்ளன.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (ஐ) ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள தேவைகளுக்கு இணங்க இந்த அறிக்கையின் 3 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களைத் தவிர முன்னைய வருடத்தில் என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள், சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெறப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் போதியளவு விடயங்களின் மட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவகையில், பின்வரும் கூற்றுக்களை வெளிப்படும் அளவுக்கு எந்தவொன்றும் எனது கவனத்திற்கு ஈர்க்கப்படவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க நிறுவனத்தின் ஆளுநர் சபையின் உறுப்பினர் ஒருவருக்கு ஒப்பந்தமொன்று தொடர்பில் நேரடியான அல்லது மறைமுகமான சாதாராண வியாபார நிலைமைக்கு அப்பாற்பட்ட தொடர்பு உள்ளமை
- 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டடத்தின 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர ஏதேனும் எழுத்துமுலமான சட்டமொன்றுக்கு அல்லது நிறுவனத்தின் ஆளுநர் சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு மாற்றமாகச் செயற்பட்டுள்ளமை.

| | சட்ட விதி ஏற்பாடுகளுக்கான தொடர்பு | விபரம் |
|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் | |
| | i. பிரிவு 16 (2) | ஏற்பாடுகளுக்கு இணங்க நிறுவனத்தின் மீளாய்வாண்டிற்கான செயலாற்றுகையை அறிக்கை நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குக்ச சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | ii. பிரிவு 38 (ஆ) | சேவை ஆரம்ப மற்றும் ஏனைய பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர்களிடமிருந்து ஒவ்வொரு பயிற்சி நிகழ்ச்சி தொடர்பிலும் பெறப்படும் பின்னூட்டல் படிவங்கள் கணக்காய்வுக்குச் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2010 ஜுலை 09 ஆம் திகதிய CA/1/1/16/1 ஆம் இலக்க சனாதிபதியின் செயலகச் சுற்றறிக்கைக் கடிதம். | வெளிநாடுகளுக்குச் செல்லும் உத்தியோகத்தர்கள் நாடு திரும்பியதன் பின்னர் சுற்றறிக்கை மாதிரியின் அடிப்படையில் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் வெளிநாடு சென்ற நிறுவனத்தின் 07 உத்தியோகத்தர்கள் அந்த ஏற்பாட்டின் அடிப்படையில் செயற்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2015 ஜுலை 14 ஆம் திதிய 03/2015 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | இடைக்கால அட்டுறுக்க்ள் உரிய பணிகளைப் பூர்த்தி செய்தவுடன் மீளளிப்புச் செய்யப்பட வேண்டியிருப்பினும் மீளாய்வாண்டில் 44 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட 2,498,440 ரூபா முற்பணங்களை தீர்ப்பதற்கு 19 நாட்கள் முதல் 119 நாட்கள் வரையான காலம் தாமதம் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. |
| (ஈ) | 2016 பெப்ரவரி 12 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பட்டப் பின் கற்கைப் பிரிவின் ஆரம்ப கிடைக்க வேண்டிய மீதியான 330,000 ரூபா மற்றும் முன்னைய வருடங்களில் மொழிக் கற்கைகள் துறையின் கிடைக்க வேண்டிய மிகையாக மதிப்பிடப்பட்ட 478,011 ரூபா என்பன ஆளுநர் சபையின் அனுமதியின்றி பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்தன. |
| (உ) | 2003 ஒக்டோபர் 28 ஆம் திகதிய PED/17 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு செல்வதற்கு முன்னர் அரச தொழில்முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற வேண்டியிருந்த போதிலும் மாதிரிச் சோதனைக்கு இணங்க 07 சந்தர்ப்பங்களில் 07 உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்வதற்கு முன்னர் உரிய அனுமதியைப் பெற்றிருக்கவில்லை. |
| (ஊ) | 1978 டிசம்பர 19 ஆம் ஆண்டின் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 31,228,496 பெறுமதி நிலையான சொத்துக்கள் தொடர்பில் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஆவணமொன்றை பேணி வரப்படவோ அல்லது தயாரிக்கப்பட்டுள்ள ஆவணம் இற்றைப்படுத்தப்படவோ இல்லை. |
| (எ) | 2003 ஜுன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3. 3 ஆம் பிரிவு | ஊக்குவிப்புக் கொடுப்பனவு நடைமுறைக்கு பொதுத் திறை சேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு அனுமதி பெறப்படாமல் 2017 ஆம் ஆண்டில் 6,041,471 ரூபாவும் 2018 ஆம் ஆண்டில் 7,469,067 ரூபாவும் 2019 ஆம் ஆண்டில் 2,380,148 ரூபாவும் நிறுவனத்தின ஊழியர் குழாத்தைச் சேர்ந்த 95 பேருக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. |

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பா-டுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர நிறுவனத்தின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் நோக்கங்களுக்கு இணங்காத விதத்தில் செயற்பட்டுள்ளமை

  1982 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தை தாபிப்பதற்கான சட்டத்தில் நிறுவனத்தின் குறிக்கோளோ அல்லது பணியோ அல்லாத மற்றும் நிறுவனத்தின் பயிற்சி நிகழ்ச்சிகளுடன் தொடர்பற்ற 37 வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகள் நடப்பு வருடத்தில் நடாத்தப்பட்டிருந்தன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளு-க்கு இணங்க நிறுவனத்தின் வளங்களை சிக்கனமான, வினைத்திறன் மிக்க, பயனுறுதி வாய்ந்த முறைகளில் உரிய காலப் பகுதிகளினுள் உரிய சட்டத்திட்டங்களுக்கு பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்காமை.

**3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்**

(அ) சேர வேண்டிய செலவுகள் கணக்கில் கடந்த சில வருடங்களாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத 1,994,507 ரூபா மீ-தியுடன் தொடர்புடையதாக இனிமேலும் பொறுப்புக்கள் இல்லையெனின் வருமானத்திற்கு பதிவழிப்புச் செய்வதற்கு அல்லது நிதிக் கூறுக்ளில் தேவையான செம்மையாக்கங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனம் 2013 ஏப்ரல் 19 ஆம் திகதி CP/13/0237/523/001 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க இரண்டாம் நிலை ஊழியர் குழாத்திற்கு 50 வீத இரண்டாம் நிலை கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டிருந்தது. அதனைச் செலுத்துவதற்க-ாக 2014 நவம்பர் 14 ஆம் திகதிய பொதுத் தொழில் முயற்சிகள் குழுவின் கட்டளைக்கு இணங்க மாதாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய 45 மணித்தியால வரையறை பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்து. அக்கட்டளைக்கு முரணாக நிறுவனத்திற்கு 2015 ஜுலை முதல் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்க வேண்டியிருந்த 9,152,375 ரூபாவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்க வேண்டிய தொகை கணக்காய்வுத் திகதி வரையில் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2018 ஆம் ஆண்டில் “சங்தரணீ” ஆய்வுநிலையம் 3.443,672 ரூபா செலவில் நவீனமயப்படுத்தப்பட்டிருந்த போதிலும் ஆய்வு நிலையத்தின் தளபாடங்கள், கணினிகள் மற்றும் ஏனைய இலத்திரனியல் உபகரணங்கள் பயன்படுத்தப்படாதுள்ளமை பௌதிக சோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.3 ஆம் பிரிவிற்கு இணங்க விலைமனுக்களைத் திறக்கும்பொறுப்பு பெறுகைக் குழுவுக்குரியதாக உள்ள அதேவேளை பெறுகைக் குழுவுக்குரியதாக உள்ளதுடன் குழுவுக்கு அதன் அதிகாரக் குழுவினால் நியமிக்கப்படும் அங்கத்தவர்கள் இருவரைக் கொண்ட விலைமனுக்களைத் திறக்கும் குழுவொன்றிடம் ஒப்படை-க்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் நிறுவனத்தைச் சுற்றியுள்ள இரும்பு வேலியை நவீனமயப்படுத்துவதற்கான விலைமனு-க்களைத் திறந்த குழு பெறுகைக் குழுவினால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவாக இருக்கவில்லை.

டபிள்யூ. பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி